விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 06 வெள்ளிக்கிழமை (22.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 215

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# நாளைய உள்ளூராட்சித் தேர்தல் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

## யாழ். அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் 65 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நாளை நடைபெறவுள்ளது. இதில் யாழ். மாவட்டத்திலுள்ள 16 உள்ளூராட்சி சபைகளும் அடங்கும். யாழ். மாவட்டத்தில் 201 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான இத் தேர்தலில் 3 இலட்சத்து 74 ஆயிரத்து 340 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரச அதிபருமான திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். [20 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழக முதல்வர் ஜெயலலிதாவுடன் இலங்கைத் தூதுவர் சந்தித்துப் பேச்சு



(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தலைமைச் செயலகத்தில் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.



இச் சந்திப்பில் இலங்கையில் இடம்பெற்ற போரின் போது இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக் (20 ஆம் பக்கம் பார்க்க)

## சுவரொட்டிகள் அகற்றப்படாது விட்டால் குடாநாட்டில் தேர்தல் ஒத்திவைக்கப்படும்

### தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நேற்று 4 மணிக்குள் சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் அகற்றப்படாவிட்டால் தேர்தல் ஒத்திவைக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை விடுத்தார். எனினும் சுவரொட்டிகள் நேற்றிரவுவரை அகற்றப்படாமல் காணப்பட்டன.

யாழ்ப்பாணம் உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்காக அரச தரப்பினரால் யாழ்ப்பாணம் நகரெங்கும் ஒட்டப்பட்டிருக்கும் சுவரொட்டிகள், பனர்கள் மற்றும் பதாகைகள் நேற்று 4.00 மணிக்குள் அகற்றப்பட வேண்டும். இல்லாவிட்டால் தேர்தல் ஒத்திவைக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய எச்சரிக்கை விடுத்திருக்கின்றார். நேற்று யாழ் செயலகத்தில் கட்சிப் பிரதிநிதிகளிடையே இடம்பெற்ற சந்திப்பில் அரச அதிபர் இமெல்டா சுகுமாரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. (20 ஆம் பக்கம் பார்க்க)

## பேராசிரியர்களின் போராட்டம் முடிவுக்கு

(கொழும்பு)

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மேற்கொண்டு வந்த தொழிற்சங்க நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளன. பேராசிரியர்கள் சங்க சம்மேளனத்தின் பேச்சாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சங்கத்தினர் முன்வைத்த கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இணங்கியதைத் தொடர்ந்து இந்த தொழிற்சங்கப் போராட்டத்தை கை விடத் தீர்மானித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தொழிற்சங்கப் போராட்டங்கள் கடந்த 75 நாட்களாக மேற்கொள்ளப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது. (எ)

## கிலாரி மீது விமல் பாய்ச்சல்

(கொழும்பு)

இலங்கைப் பிரச்சினையை பெரிதாக்கும் நோக்கிலேயே அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கிலாரி கிளின்டன், தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்துள்ளதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பொதுவாக அமெரிக்காவின் உயர்மட்ட இராஜதந்திரிகள் மாநில அரசாங்கப் பிரதி நிதிகளை சந்திப்பது கிடையாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திபொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கிலாரிக் கிளின்டனின் இந்திய விஜயம் குறித்து அவர் கருத்து வெளியிட்டுள்ளார். செல்வதற்கு இடமில்லாமல் கிலாரி ஆசியாவுக்கு விஜயம் செய்யவில்லை எனவும் காரண காரியத்துடன் (20 ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்ற பொறுப்புக் கூறுதல் கொழும்பில் இன்று கருத்தரங்கு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறுதல் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் கொழும்பில் இன்று கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவர் தலைமை தாங்கவுள்ள இக் கருத்தரங்கை பாத் பயின்டர் பவுன்டேசன் என்ற உதவி நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட சிலருக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்ட இக் கருத்தரங்கு இன்று காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை கொழும்பில் அமைந்துள்ள நட்சத்திர விடுதி ஒன்றில் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் பம்பலப்பிட்டியில் தலைமையகத்தைக் கொண்டுள்ள இந்த உதவி நிறுவனத்திற்கு எங்கிருந்து நிதி கிடைக்கிறது என ஆங்கில ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியுள்ளது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## உயிர்த் தியாகம் செய்ய தயங்கமாட்டேன்- சரத்

(கொழும்பு)



துர் ஆட்சிக்கு எதிராக உயிர்த் தியாகம் செய்யவும் தயங்கப்போவதில்லை என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மருத்துவ சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனை ஒன்றுக்குச் சென்றிருந்த போதே அவர் (20 ஆம் பக்கம் பார்க்க)

SAUDI ARABIA
Rs. 10/-
IDD Per Minute Package
#678# க்கு டயல் செய்து நுழைந்திடுங்கள் அல்லது IDDMIN என டைப் செய்து 678 க்கு SMS செய்யுங்கள்
நிலையான தொலைபேசிகளுக்கு
Dialog

## நீதியான தேர்தலை உறுதிப்படுத்த 141 பேர் யாழிற்கு அனுப்பி வைப்பு

### பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நீதியான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்தவென வெளி மாவட்டங்களிலிருந்து 141 முகாமைத்துவ உதவியாளர்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

ஏதாவது அசம்பாவிதங்கள் இடம்பெறும் போது யாழ். மாவட்ட அதிகாரிகள் அது தொடர்பான உண்மையை கூற மறுக்கலாம்.

இந்நிலையில் வெளி மாவட்ட உத்தியோகத்தர்கள் சரியான தகவல்களை வழங்குவர் என பிரதி தேர்தல் ஆணையாளர் எம்.எம். மொகமட் தெரிவித்தார்.

தேர்தல் நடைமுறைகள் தொடர்பாக நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ். அரச அதிபர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (20 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப போராடிவரும் வன்னி மக்கள்!

## பி.பி.சி. தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெயர்ந்து தற்போது. சொந்த கிராமத்தில் மீள்குடியேறியிருக்கின்றோம். ஆனால் இப் போரின் போது எனது அம்மா உட்பட இரு சகோதரர்களையும், ஒரு சகோதரியையும் இழந்துள்ளேன்.

இவர்களை இழந்த நிலையில் தற்போது எங்கள் சொந்த கிராமங்களுக்கு திரும்பி வந்துள்ளோம். நாம் உண்மையில் மகிழ்ச்சியுடன் வாழவில்லை.

இவ்வாறு வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெயர்ந்து மீண்டும் தமது சொந்தக்கிராமத்தில் குடியேறியுள்ள சந்திரசேகரன் தயாகரன் என்பவர் பி.பி.சி செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப்போர் முடிபடைந்து இருவருடங்கள் கழிந்துள்ள நிலையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த பி.பி.சி. செய்திச்சேவையின் ஊடகவியலாளர் சாள்ஸ் கவிலன்ட் அங்கு மீள்குடியேறியுள்ள மக்கள் சிலரைச் சந்தித்து வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

போரின் போது இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தற்போது சொந்தக்கிராமங்களில் மீள்குடியேறி தமது வாழ்வை மீளக் கட்டி யெழுப்ப போராடிக்கொண்டிருப்பதாக அதில் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மீள்குடியேறியுள்ள மக்கள் பலர் போரின் வடுக்களை இன்னமும் சுமந்து கொண்டிருப்பதாகவும் தமக்கான இருப்பிடங்களை நிர்மாணிப்பதில் மிகவும் சிரமப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போரின்போது இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்து தற்போது தமது சொந்தக் கிராமங்களுக்கு திரும்பிச் சென்றபோது ஐக்கிய நாடுகள் சபை இவர்களுக்கு சிறிய மானியத்தை வழங்கியுள்ளது.

கிளிநொச்சிக்கு திரும்பிக் கொண்டிருக்கும் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பத் தேவையான நடவடிக்கைகளையும் நிதியுதவிகளையும், அரசாங்கம் வழங்கிவருவதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ள போதிலும் இத்தகைய உதவிகள் தமக்குக் கிடைக்க வில்லை என மீள்குடியேறிய மக்கள் கூறுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் வடமாகாணத்தை அபிவிருத்தி செய்துவருவதாக அரசாங்கம் தெரிவிக்கின்ற போதிலும் இத்தகைய அபிவிருத்தியின் பயன்கள் கிளிநொச்சியில் வாழ்கின்ற எல்லா மக்களுக்கும் போய்ச்சேரவில்லை என அவர் தனது வீடியோவில் தெரிவித்துள்ளார். (எ)

# சட்டவிரோத சிகரெட் வைத்திருந்த சீனப்பிரஜைக்கு அபராதம் விதிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 2 ஆயிரம் சிகரெட்டுகளை வைத்திருந்த சீனப் பிரஜை ஒருவருக்கு கொழும்பு நீதிமன்றமொன்று நேற்று 35 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது.

சூ யாங் எனும் இந் நபர் கொள்ளுப்பிட்டியில் வாகனமொன்றில் பயணம் செய்துகொண்டிருந்த போது சட்டவிரோதமான 2 ஆயிரம் சிகரெட்டுகளுடன் கைது செய்யப்பட்டார்.

அவர் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவரின் சார்பாக வாதாடிய சட்டத்தரணி மொஹம் மொஹடீன், தனது சாட்சிக்காரர் தனது சொந்த பாவனைக்காகவே மேற்படி சிகரெட்டுக்களை வைத்திருந்ததாக வாதிட்டார்.

எனினும் சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு 35 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் மேற்படி சிகரட்டுக்களை உடனடியாக அழித்துவிடும்படி நீதவான் உத்தரவிட்டார். (எ)

# திமிங்கல வேட்டையில் இலங்கை கடற்படை!

(திருகோணமலை)

மன்னார் தாழ்வுபாடு கீரிகடற்கரையில் கரை ஒதுங்கிய திமிங்கலத்தை கடற்படையினரே கொன்றிருக்கலாம் என்று கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்கள அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இறந்த நிலையில் கரையொதுங்கிய திமிங்கலத்திலிருந்த ஆம்பர் எனப்படும் விலை உயர்ந்த பொருள் காணாமல் போயிருந்ததாலேயே இந்த சந்தேகம் எழுந்துள்ளது. திமிங்கலத்தில்உள்ளஆம்பர்எனப்படும்பொருள் சுமார் 100 மில்லியன் ரூபாய்வரை பெறுமதியானது என்று திருகோணமலை பிராந்திய கடற்தொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் அதிகாரிநீல்மொன்ரகேதெரிவித்துள்ளார்.

கரையொதிங்கிய திமிங்கலத்தின் உடலை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரிய கடற்படை அதனை உடனடியாக எரித்துவிட்டதால் இந்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இலங்கை கடல் எல்லைக்குள் கண்டுபிடிக்கப்படும் அனைத்து வளங்களையும் கையாளும் அதிகாரம் கடற்தொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கே உள்ளது. ஆனால் அவர்களிடமிருந்து அவசரமாக அந்த திமிங்கலத்தை பொறுப்பேற்ற கடற்படையினர் அதனை உடனடியாகவே எரித்து விட்டதாகவும் நீல் மொன்ரகே கூறியுள்ளார். (எ)

# லசந்த கொலை வழக்கு சந்தேக நபருக்கு பிணை

(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இராணுவ புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கல்கிஸ்ஸ பிரதம நீதவான் நிரோஷா பெர்னான்டுவின் உத்தரவுக்கமையவே இவர் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றம் அண்மையில் வழங்கிய 75 ஆயிரம் ரூபா ரொக்க பிணையிலும், 2 இலட்ச ரூபா சரீர பிணையிலும் இவர் நிபந்தனையின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மாதாந்த இறுதிஞாயிற்றுக்கிழமைகளில் கல்கிஸ்ஸ பொலிஸ் நிலையத்தில் ஆஜராகுமாறு சந்தேக நபருக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதேவேளை சம்பவம் தொடர்பில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமற்றையசந்தேகநபரை அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (எ)

# தேர்தல் முறைப்பாடுகளை தெரிவிக்க தொலைநகல் வசதி

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தினத்தன்று முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக தேர்தல் செயலகம் மூன்று விசேட தொலைநகல் இலக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களிலிருந்து 0112 877 614 என்ற இலக்கத்தினூடாகவும் குருநாகல், புத்தளம், மொனராகலை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலிருந்து 0112 877 616 இலக்கத்தினூடாகவும் தமது முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளைகொழும்பு, கம்பஹா கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இருந்து 0112 877 613 என்ற தொலைநகல்இலக்கத்தினூடாகமுறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

# பாலஸ்தீன பிரச்சினையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

இஸ்ரேலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாலஸ்தீனியர்களை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலையிட வேண்டும் என பாலஸ்தீனநீதிகள்சபை கோரியுள்ளது.

அதன் பேச்சாளர் அசீஸ் திவயின்மற்றும்பிரதிநிதிகளுக்கும்பாலஸ்தீனத்துக்கான இலங்கை தூதுவருக்கும் இடையில் நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போது குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது தொடர்பிலான கோரிக்கை மனு ஒன்றையும் அந்த சபையினர் கையளித்துள்ளனர். (எ)

# தேர்தல் அலுவலர்கள் கிளிநொச்சி செல்ல வாகன வசதி ஏற்பாடு

(கிளிநொச்சி)

நாளை நடைபெறவுள்ள கிளிநொச்சி உள்ளூராட்சி சபைத்தேர்தல் கடமைக்காக நியமிக்கப்பட்டுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஊழியர்கள் பயணம் செய்வதற்கு ஏதுவாக, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியிலிருந்து இன்று 8.00 மணிக்குப் புறப்பட்டு கிளி/மத்திய கல்லூரிக்கு வந்து சேரக்கூடிய வகையில் பேருந்துகள் இரண்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. எனவே உரிய நேரத்திற்குக் குறித்த இடத்திற்கு வருகை தருமாறு கிளிநொச்சி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசஅதிபருமானதிருமதிஆர்.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (எ)


**Study in Poland** — Aug / Sep INTAKE

- மிகக் குறைந்த செலவில் *Sponser* ஏற்பாடு.
- *100% Visa* உத்தரவாதம்.
- *IELTS* தேவையில்லை.
- கல்வி தகைமை *O/L*
- அதிகாரபூர்வமான ஆவணங்களின் ஏற்பாடு
- *KOZMINSKI University Waswaw*
- *POZNAN University POZNAN*
- *CPV College WASWAW*

850,000/= மட்டுமே

**STUDY IN UK** — Aug / Sep INTAKE

குறைந்த செலவில் குறுகிய காலத்தில் வெளிநாட்டில் உங்கள் உயர் கல்வியினை மேற்கொள்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

**அனுமதிகளுக்கு இன்றே விரையுங்கள்**

- மிகக் குறைந்த செலவில் *Sponser* ஏற்பாடு.
- *100% Visa* உத்தரவாதம்.
- *IELTS* தேவையில்லை.
- அதிகாரபூர்வமான ஆவணங்களின் ஏற்பாடு.
- ஆங்கிலத்தில் தேர்ச்சி குறைந்தவர்களுக்கும் அனுமதி பெற்றுத்தருவதற்கு ஏற்பாடு.
- *2 days* இல் *Offer letter* வழங்கப்படும்.
- *3 days* இல் *Cash letter* வழங்கப்படும்.
- *2 weeks* இல் *Embassy* போடப்படும்.

550,000/= மட்டுமே

(5524)

LONDON HEAD OFFICE
CONTACT: Mr.Ronald Kingsly
109, CRISPIN ROAD,
BRADVILLE, MK-137BP, MILTONKE YPNS

மேலதிக விபரங்களுக்கு:-

**ISC LANKA (PVT) LTD**



No.533, Stanly Road
(Rasavinthoddam Junction),
Jaffna.
*Manager: T.Prashanna*
*T.P.: 0779797424/0750477313*





**சிவபார்வதி ஜோதிட நிலையம்**

**பண்டித்-மஞ்சுநாத சுவாமி**

**தொ.பே. இல: 077 8949044**

அன்பானவர்களே!

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில், வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம் போன்ற விடயங்களையும், கணவன்-மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல், வெளியூர் பயணங்கள், கல்வி உத்தியோகம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், எதிரிகள் கண்திருஷ்டி போன்ற எல்லாவித பிரச்சினைகளையும் எதிர்கால பலாபலன்களையும் தெரிவிப்பார்.

**சண்ஜெய உணவகம் (மேல்மாடி)**

**414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)**
**நேரம்:- காலை 7.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை**
**கட்டணம் ரூபா 101/-**

(5508)



**தேவை**

திருநெல்வேலியில் உள்ள எமது நிறுவனத்திற்கு சமையல் வேலை தெரிந்த, சுத்திகரிப்பு பராமரிப்பாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-
077 9530496

(552)

# இன்று ஒரு தகவல்

## அரசனின் வைரமோதிரம்

ஓர் அரசர் இருந்தார்.

அவருக்கு வயதாகி விட்டது.

அதனால் அவர் உள்ளத்தில் கவலையும் பயமும் குடிகொண்டன.

மரணபயம் காரணமாக அந்த அரசரால் இரவில் சரியாகத் தூங்க முடியவில்லை.

ஏற்கனவே போர்க்களங்களில் எத்தனையோ பேரை ஓட ஓட விரட்டியவர் இந்த அரசர்.

ஆனாலும் இப்போது அந்தச் துணிச்சலெல்லாம் அவரிடமிருந்து எங்கேயோ போய்விட்டது.

'என்ன செய்யலாம்?' என்று அரசர் யோசித்தார்.

பின்னர் அவர் எல்லா அமைச்சர்களையும் அழைத்து, "எனக்கு ஓர் ஆலோசனை சொல்லுங்கள்!" என்று கேட்டுக்கொண்டார்.

அமைச்சர்கள், "என்ன ஆலோசனை?" என்று வினவினார்கள்.

''எனக்கு ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டு விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த நேரத்தில் நீங்கள் யாருமே ஆலோசனை சொல்வதற்கு என் பக்கத்தில் இல்லை என்றும் வைத்துக் கொள்ளுங்கள். அந்தச் சமயத்தில் எனக்கு உபயோகப்படும் வகையில் ஒரு வாசகம்– பொன்மொழி சொல்லுங்கள். அதை நான் என்னுடைய வைர மோதிரத்தின் அடியில் பதித்து வைத்துக் கொள்வேன்!" என்றார் அரசர்.

அவர் போட்டிருந்த வைர மோதிரமும் அதற்குத் தகுந்தமாதிரி திறந்து மூடுவதுபோல் அமைந்திருந்தது.

அமைச்சர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, 'அரசருக்கு என்ன வாசகம் சொல்லலாம்?' என்று யோசனை செய்தார்கள்.

ஒருவருக்கும் ஒன்றும் சரியாகத் தோன்றவில்லை... குழப்பமாக இருந்தது.

அந்த நேரத்தில் பெரியவர் ஒருவர் அங்கே வந்தார்.

அவர், ''நான் அரசர் கேட்டதற்குப் பொருத்தமாக ஒரு வாக்கியம் சொல்வேன். ஆனால் ஒரு நிபந்தனை: அதை யாரும் ஆர்வம் காரணமாக அவசரப்பட்டு படிக்கக் கூடாது. அதை இரகசியமாக அந்த மோதிரத்திற்குள் எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். அரசர் எப்போதாவது இக்கட்டில் மாட்டிக் கொள்ளும் போது– வேறு வழியே இல்லை– என்ற நிலைமை ஏற்படும்போது மட்டும்தான் மோதிரத்தைத் திறந்து பார்க்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

பெரியவரின் நிபந்தனையை அரசர் உட்பட அமைச்சர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள்.

பெரியவர் கூறிய வாக்கியத்தை இரகசியமாக மோதிரத்திற்குள் பதித்து மூடினார்கள். அரசர் அதைத் தன் விரலில் மாட்டிக் கொண்டார்.

சிறிது காலமாயிற்று.

அந்த அரசருக்கு ஒரு சோதனை வந்தது.

இவர் மீது அடுத்த நாட்டு மன்னன் படையெடுத்து வந்தான். அவன் இவரிடம் ஏற்கனவே தோற்றுப் போனவன். இப்போது ஒரு வெறியில் வந்தான். வெற்றி பெற்றுவிட்டான்.

இவர் தன் நாட்டை இழந்தார்... எல்லாவற்றையும் இழந்தார். அடிபட்ட ஒரு குதிரையில் ஏறித் தப்பிச் சென்றார். அவரைப் பகைவர்கள் பின்னால் துரத்தினார்கள்...

இவர் ஒரு மலையுச்சிக்குச் சென்றுவிட்டார். அதற்கும் அப்பால் போக முடியாது... பயங்கரமான பள்ளம். அது உல்லாசப் பயணிகள் வந்து கண்டுகளிக்கும் இடம். ஆனால் இவருக்கு அந்த இடம் மரணப் பயணத்தின் வாசல்!

அவர் இங்கிருந்து திரும்பவும் முடியாது... அவ்வளவு குறுகிய பாதை அது. வேறு வழியே இல்லை. அந்தச் சமயத்தில் சூரிய ஒளி மோதிரத்தின் பட்டு மின்னியது.

உடனே இவருக்கு மோதிரத்தின் அடியில் வைத்த வாசகம் நினைவுக்கு வந்தது.

இவர் மோதிரத்தைத் திறந்து படித்தார். அதில், இந்த நிலையும் மாறிவிடும்! (This too will pass away) என்ற வாசகம் இருந்தது.

அதைப் படித்ததும் மன்னருக்கு ஒரு தைரியம் வந்துவிட்டது.

இவ்ரைத் துரத்திக் கொண்டு பின்னால் வந்த பகைவர்களும் திசை மாறி எங்கேயோ தேடிப் போய் விட்டார்கள்!

'அவர்கள் என்னைத் துரத்தி வராவிட்டால் இவ்வளவு அழகான ஓர் இடம் இருப்பதே எனக்குத் தெரியாமல் போயிருக்குமே!' என்று அரசர் நினைத்தார்.

'இவ்வளவு அழகை ரசிப்பதற்காக ஒரு நாட்டையே கூட இழக்கலாம்' என்று அவருக்குத் தோன்றியது!

அமைதியாக இருந்து அரசர் அந்த அழகான இடத்தை ரசித்தார்.

எதிரிகள் அனைவரும் எங்கேயோ போய்விட்டார்கள்.

மன்னர் நாடு திரும்பினார். மீண்டும் படைகளைத் திரட்டினார். சிறிது காலத்திற்குள் படையெடுத்துச் சென்றார். யாரிடம் தோற்றாரோ அவரையே வெற்றி கண்டு மன்னர் தலைநகருக்குத் திரும்பி வருகிறார்.

வரவேற்பு விழா பிரமாதமாக இருந்தது... ஆடல், பாடல், கோலாகலம்!

அவற்றைப் பார்த்ததும் அந்த அரசருக்குத் தலைகால் புரியவில்லை... நம்மை இனிமேல் யாராலும் ஜெயிக்க முடியாது! என்று அவர் நினைத்தார். அகம்பாவம் அவரிடம் இலேசாக எட்டிப் பார்த்தது.

இப்போது மறுபடியும் சூரிய ஒளிபட்டு மோதிரம் மின்னியது. அதைத் திறந்து அரசர் மறுபடியும் படித்தார். "இந்த நிலையும் மாறிவிடும்!" என்று அதில் இருந்தது.

அவ்வளவுதான். அவர் மனம் அடங்க ஆரம்பித்தது. ஆணவம் நீங்கியது.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன தெரியுமா?

எந்தச் சூழ்நிலையிலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் இங்கே எதுவுமே நிரந்தரமில்லை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவும் "பிரபோதினி" கடன்திட்டம்

(யாழ்ப்பாணம்)

''பிரபோதினி'' என்ற வறுமை ஒழிப்பு நுண்பாக கடன்திட்ட வட மாகாண பிராந்திய காரியாலயம் யாழ். அரசடி வீதியில் நேற்று முன்தினம் திறக்கப்பட்டுள்ளது.

இக்கடன் திட்டமானது இலங்கை மத்திய வங்கியினால் வடக்குக் கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களிலும் ஏனைய 6 மாவட்டங்களிலும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை–ஜப்பான் அரசாங்கங்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் ஜப்பான் நாட்டில் உள்ள ஒத்துழைப்புக்கான நிறுவனம் இக்கடன் திட்டத்திற்கான நிதியுதவியை வழங்கி வருகின்றது.

கடனைப் பெற்றுக் கொள்வதற்காக 5 தொடக்கம் 8 பேர் கொண்ட சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. இவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகின்றது.

இதனால் இவர்கள் பெறும் கடனை மீளச் செலுத்த வசதியாக அமையும்.

இத்திட்டமானது பெண்களைக் கூடுதலாக உள்வாங்கினாலும் குடும்பத்தைத் தலைமை தாங்கும் பெண்களுக்கும் புனர்வாழ்வளிக்கப்பட்ட இளைஞர் மற்றும் யுவதிகள் இடம் பெயர்ந்து மீளக்குடியேறிய குடும் பங்களுக்கும் முன்னுரிமை வழங் கப்படுகின்றது.

இத்திட்டத்தில் நாடளாவிய ரீதியில் 5 ஆயிரத்து 10 குடும்பங்கள் இணைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ–4)

# வாழைநார் சார்ந்த கைவினைப்பொருள் மேம்படுத்தல், உற்பத்தி பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஒழுங்கமைப்பில் இந்திய வளவாளர்களினால் வாழைநார் பயிற்சி வழங்கப்பட்டது.

மேற்படி பயிற்சியைப் பெற்றவர்களுக்கு உற்பத்திகளினை மேம்படுத்துவதற்கான மேலதிக பயிற்சி தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளது.

இப் பயிற்சியைப் பெற விரும்புபவர்கள் யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பெயர், விபரங்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாணம் கைத்தொழில் அபிவிருத்திச்சபை பதில் பிரதிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான்

# கோட்ட பாடசாலைகள் இன்று நடைபெறும்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள துணுக்காய் கோட்ட பாடசாலைகளைத் தவிர்ந்த ஏனைய இரு கல்விக் கோட்டங்களான மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் கோட்டப் பாடசாலைகள் அனைத்தும் இன்று வழமை போன்று நடைபெறுமென துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் க.மேகநாதன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ–15)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 35 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 95 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 50 | 70 |
| தக்காளி | 40 | 40 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 40 | 40 |
| கோவா | 50 | 50 | 60 |
| கரட் | 50 | 70 | 50 |
| பூசணி | 25 | 25 | 25 |
| புடோல் | 25 | 40 | 30 |
| வாழைக்காய் | 40 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 55 | 70 | 50 |
| பாகற்காய் | 80 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 100 | -- |
| பயற்றங்காய் | 80 | 70 | 80 |
| லீக்ஸ் | 50 | 40 | 50 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 80 | 60 | 70 |
| முருங்கைக்காய் | 70 | 80 | 100 |
| போஞ்சி | -- | 100 | -- |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | 20 |
| கீரை – 1 பிடி | 10 | 15 | 15 |
| தேசிக்காய் | 30-40 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 35 | 40 |

# இராசி பலன்

22.07.2011

(ஆடி 06, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

சப்தமி முன்னிரவு 8.57 மணிவரை

ரேவதி முன்னிரவு 10.37 மணிவரை

இராகுகாலம் 10.31–12.01 மணிவரை,

சுபநேரம் 6.01–7.31 மணிவரை

**மேடம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வெளியூர் தொடர்புகள் விரிவடையும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட் சேர்க்கையுண்டு.

**இடபம்** காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்திகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், உறவினர் வருகையுண்டு, பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**கடகம்** திடீர் பயணங்களால் அனுகூலமுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தந்தை வழி உறவினர்களால் சில உதவிகள் கிடைக்கலாம்.

**சிங்கம்** எதிர்பாராத விதத்தில் சில மனஸ்தாபங்கள் நிகழலாம், உடல் நலனில் கவனம் தேவை, வேலைச் சுமை கூடி மனச்சஞ்சலத்தைத் தரும், போசன சுகமுண்டு.

**கன்னி** ஆன்மீக சிந்தனை மேலோங்கும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினருடன் குதூகலப்பான பயணமொன்றை மேற்கொள்வீர்கள், பொருளாதார நிலை திருப்தி தரும்.

**துலாம்** சுப செய்திகள் நாடி வரும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும், சுவாரஸ்யமான நாள், அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** வரவு எதிர்பார்த்தபடியே வந்து சேரும், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், புத்திரரால் பெருமையடைவீர்கள், தொலைபேசித் தகவலால் உற்சாகமடைவீர்கள்.

**தனுசு** செலவு செய்து மகிழும் நாள், நேர்மையுள்ள நண்பர்களால் நம்பிக்கைகள் நிறைவேறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், போசன சுகமுண்டு.


**மகரம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம், இளைய சகோதரத்தின் வழியே இனிய செய்தியொன்று வந்து சேரலாம்.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொருளாதார நிலை உயரும், பொது வழியில் மதிப்பும் மரியாதையும் உயரும், நில புலன்களால் நன்மையுண்டு.

**மீனம்** வாக்கு சாதுரியத்தால் வளம் காணும் நாள், மாலை நேரப் பயணம் மகிழ்ச்சி தரும், தெய்வ சிந்தை மேலோங்கும், பெரிய மனிதரின் சந்திப்புண்டு.

வள்ளுவன்

# மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் மூன்று தங்கப்பதக்கங்கள் பெற்று சாதனை



(யாழ்ப்பாணம்)

மாகாணமட்டப் மெய்வல்லுநர் போட்டிகளில் யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவன் நா.சுமன் மூன்று தங்கப்பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

13 வயதுப் பிரிவில் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்று இரு தங்கப்பதக்கங்களை வென்றுள்ளார்.

அத்தோடு மாகாணத்தில் சிறந்த வீரனுக்கான தங்கப்பதக்கத்தையும் கேடயத்தையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். (ஶ்ரீ-4)

# நோர்வேயிலிருந்து வந்தவர் புங்குடுதீவு கடலில் மரணம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோயில் கடலில் குளிக்கச்சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. நோர்வேயிலிருந்து புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோயிலுக்கு வந்த நல்லதம்பி கிருபானந்தன் (வயது 50) என்பவரே பலியானவராவார்.

ஊர்கவாற்றுறை பொலிஸாரினால் மீட்கப்பட்ட இவரது சடலம் நேற்று முன்தினம் இரவு வேலணை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ)

## கூடைப்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கடந்த 30 ஆண்டுகளுக்குப் பின்னர் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியினருக்கும் காங்கேசன்துறை கடற்படை அணியினருக்கும் இடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு காங்கேசன்துறை இலங்கை கடற்படை கூடைப்பந்தாட்ட மைதானத்தில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத் தலைவர் எஸ்.ரமணன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஶ்ரீ-2)




## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாயன்மார்க்கட்டு அருள்மிகு ஶ்ரீ இராஜராஜேஸ்வரி(பேய்ச்சி) அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை9.15 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு தீர்த் தத்திருவிழாவும் மாலை 6.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும். (ஶ்ரீ)

*****


(யாழ்ப்பாணம்)

யா/அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இதில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 9.05 மணிக்கு தேர்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஶ்ரீ)

# ஏ-9 வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சாரதி காயம்

(மல்லாவி)




ஏ-9வீதியில்நுணாவில்கோபி பல்பொருள் வாணிப நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்ற வாகன விபத்தில் எல்வ் ரக ஊர்தி பலத்த சேதமடைந்ததுடன் சாரதி காயமடைந்து சாவகச்சேரி பொது வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற் பகல் 4.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த எல்வ் ரக ஊர்தியும் யாழ்ப்பாணத்திலிரு ந்து சாவகச்சேரி நோக்கி வந்துகொண்டிருந்த ஊர்தியும் எதிரெதிரே மோதிக் கொண்டதால் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன் போது சம்பவ இடத்திற்கு வருகை தந்த சாவகச்சேரி பொலிஸார் தடைப்பட்டிருந்த ஏ-9 வீதிப் போக்குவரத்தினை சீராக்கியதோடு இவ்விபத்துச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டனர். (ஶ்ரீ-4-15)

## மெய்வல்லுநர் போட்டிகளில் வெற்றி



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் திருநெல்வேலி சிழக்கு யா/ செங்குந்த இந்துக்கல்லூரியைச் சேர்ந்த செல்வன் சண்முகராசா அருட்கு மரன் 21 வயது பிரிவில் 200 மீற்றர் ஓட்ட த்தில் 2 ஆம் இடத்தினையும் 100 மீற்றர் ஓட்டத்தில் 3 ஆம் இடத்தினையும் பெற்று கொண்டார். (ஶ்ரீ)

## சித்திரப்பாட மாதிரி வினாத்தாளை பார்வையிடலாம்

(யாழ்ப்பாணம்)


ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி.சித்திரப் பயிற்சி நிறுவனம் 2011 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தயாராகும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்காக சித்திரப்பாட மாதிரி வினாத்தாள் ஒன்றை தமது www. iatart. webs. com என்ற இலவச இணையத்தளத்தில் வெளி யிட்டுள்ளது.

மேலும் இவ் இணையத் தளத்தினூடாக தமிழ்மொழியில் சித்திரப் பாட விடயங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமென அந் நிறுவன இயக்குநர் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ)

## ஆங்கில உறுப்பெழுத்து போட்டியில் முதலிடம்



சி. மனாமிர்தன்



ஶ்ரீ. டிலக்ஸன்

(யாழ்ப்பாணம்)

2010 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட ஆங்கில உறுப்பெழுத்துப் போட்டியில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் சி. மனாமிர்தன் முதலாமிடத்தை பெற்றுள்ளார்.

அத்துடன் அண்மையில் நடைபெற்ற வடமாகாண தடகளப் போட்டியில் இதே பாடசாலை மாணவன் ஶ்ரீ. டிலக்ஸன் உயரம் பாய்தலில் இரண்டாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (ஶ்ரீ-4)

# சீரான போக்குவரத்து சேவையை வழங்குமாறு மக்கள் கோரிக்கை

(பொற்பதி)

மாமுனை, செம்பியன்பற்று வட கரையோர மக்கள் சீரான போக்குவரத்து சேவையின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

வடமராட்சி கிழக்கு மக்களுக்கு போக்குவரத்து சேவை ஓரளவு சீராக இருக்கின்ற போதும் மாமுனை, செம்பியன்பற்று ஆகிய இடங்களுக்கு பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப் படாமையினால் மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

வடமராட்சி கிழக்கிலிருந்து பருத்தித்துறை பிரதேசத்திற்கும் யாழ்ப்பாண பிரதேசத்திற்கும் சென்று வரும் பேருந்துகள் செம்பியன் பற்று தெற்குப் பகுதியிலிருந்து செம்பியன் பற்று வடக்குப் பகுதிக்கும் மாமுனை தெற்கிலிருந்து மாமுனை வடக்குப் பகுதிக்கும் சென்று வந்தன.

ஆனால், தற்பொழுது இப் பேருந்து சேவைகள் மருதங்கேணி பருத்தித்துறையூடாகவே இடம்பெற்று வருகின்றது.

இதனால் மாமுனை கடற்கரைப் பகுதியிலிருந்தும் செம்பியன்பற்று கடற்கரைப் பகுதியிலிருந்தும் போக்குவரத்து செய்ய வேண்டிய மக்கள் சுமார் 2 கிலோமீற்றர் தூரம் நடந்து சென்று இந்தக் கிராமங்களின் தெற்குப் பகுதியால் செல்கின்ற பேருந்துகளுக்காக காத்து நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையுள்ளது.

எனவே, உரிய தரப்பினர் நடவடிக்கையை மேற்கொண்டு உள்ளூரில் போக்குவரத்து சேவையை பெற முடியாத மக்களுக்கு போக்குவரத்து சேவையைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஶ்ரீ-64)

## மஹோற்சவம்

(மருதங்கேணி)

புலோலி பசுபதீஸ்வரர் ஆலய அம்மன் திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட்மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தேர் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க் கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஶ்ரீ-35)





யா/செங்குந்தா இந்துக்கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட செயற்பாட்டறைத் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதியமைச்சர் ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பாடசாலை அதிபர் இ.பாலகுமார் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# மன்மோகன் சிங்-சோனியா மோதல்?

சொன்னால் நம்பமாட்டீர்கள்... நம்பிக்கைக்கு உரிய தோழமையுடன் இருந்த மன்மோகனும் சோனியாவும் இன்று ஒருவருக்கு ஒருவர் மனக்கசப்புடன் வலம் வருகின்றனர்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் கடந்த 12ஆம் திகதி புதிய அமைச்சர்கள் பதவி ஏற்பு விழா. அப்போது பிரதமர் "2014இல் நடக்க இருக்கும் பொதுத் தேர்தலுக்கு முன்னால் இது தான் கடைசி அமைச்சரவை மாற்றம்" என்றார். பிரதமரின் இந்த அறிவிப்பு டில்லியில் அதிர்ச்சியை உருவாக்கி உள்ளது. "தனது விருப்பப்படி அமைச்சரவையை மாற்றி அமைக்க சோனியா விடவில்லை. அந்தக் கோபத்தைத்தான் பிரதமர் இப்படி வெளிப்படுத்தினார்" என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

மத்திய இணை அமைச்சர்களாக ஸ்ரீகாந்த் ஜேனா, குருதாஸ் காமத் ஆகிய இருவருக்கும் தனிப் பொறுப்பு தரப்பட்டு இருந்தது. ஆனால் இருவருமே பதவி ஏற்க வரவில்லை. டில்லியை விட்டே குருதாஸ் காமத் போய் விட்டார். தன் வருத்தங்களைக் கடிதமாக வடித்து பிரதமருக்கும் சோனியாவுக்கும் அனுப்பினார். தனிப் பொறுப்பு கிடைக் கும் என்று எதிர்பார்த்த ஜேனா 'ஒரிஸாவைப்பற்றி மத்திய அரசுக்கு அக்கறை இல்லை!' என்று சொல்லி விழாவைப் புறக்கணித்தார்.

சட்ட அமைச்சராக இருந்த வீரப்ப மொய்லிக்கு, கார்ப்பரேட் நிறுவனங்க்ளின் விவகாரத் துறை ஒப்படைக்கப்பட்டது. அவரது கோபமும் பிரதமரிடம் தான் திரும்பியது. "சில சுயநலவாதிகளின் பிரசாரங்களை வைத்து என்னை மாற்றி உள்ளனர். சட்ட அமைச்சகத்தின் நிர்வாகம் சரியாகச் செயல்படவில்லை என்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் கூறுவதைவைத்து என்னை மாற்றுவது எப்படி? நீதிமன்ற வழக்குகளில் அரசுக்குப் பின்னடைவு இருக்கலாம். அது அந்த அமைச்சகங்களின் நிர்வாகத் திறமை இன்மை. அதற்கு என்னைப் பலிகடா ஆக்குவதா?" என்று குமுறினார் மொய்லி.

ரயில்வே அமைச்சராக இருந்த மம்தா, மேற்கு வங்க முதல்வராக ஆனதால் அவரது கட்சியைச் சேர்ந்த முகுல் ராய், ரயில்வே இணை அமைச்சர் ஆனார்.

இந்தப் பதவி ஏற்பு நடந்த பின்னர் நடந்தது ஒரு ரயில் விபத்து. பிரதமர் அலுவலகம், முகுல் ராயிடம் அஸாம் மாநிலத்தில் காம்ரூப் என்ற இடத்துக்குச் சென்று ரயில் விபத்தைப்



பார்வை இடுங்கள் என்றது. அவர் உடனே பிரதமரைப் போகச் சொல்லுங்கள் என்றாராம். காரணம் கேபினெட் அந்தஸ்து கிடைக்காத வருத்தம் அவருக்கு.

சட்டத்துறையை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள் என்று கபில்சிபலிடம் பிரதமர் சொன்னார் ஆனால் கபில்சிபல் ஏற்கவில்லை. நீங்கள் சொன்னதற்காகத்தான் தொலைத்தொடர்பு துறையை வாங்கினேன். எனக்கு மனிதவளம் மட்டுமே போதும் என்றாராம். எனவே சட்டத்துறை சல்மான் குர்ஷித்துக்குத் தரப்பட்டது. கடந்த இரண்டு வருடங்களில் மூன்றாவது முறையாக நடந்த இந்த அமைச்சரவை மாற்றத்தில் தான் நினைத்ததை அப்படியே பிரதமரால் செய்ய முடியவில்லை... மற்றவர்களுக்கு மகிழ்ச்சியானதையும் செய்து தரமுடியவில்லை.

இதற்குக் காரணம் பிரதமருக்கும் காங்கிரஸ் தலைமைக்கும் இடையே உள்ள கருத்து வேறுபாடு என்று சொல்லப்படுகிறது. பிரதமர் சொல்வதை, காங்கிரஸ் தலைமை கேட்பது இல்லை என்றும் சோனியா சொல்வதை பிரதமர் கேட்பது இல்லை என்றும் சொல்கிறார்கள் டில்லியில்.

சில முக்கியமான துறைகள் மீது பிரதமரால் கை வைக்க முடியவில்லை. அவர்களது துறைகளில் தலையிடவும் பிரதமருக்கு அனுமதி இல்லை.

சோனியாவின் சுற்றுவட்டாரம் இந்தத் தடையை விதித்து உள்ளது. இதனால் பிதுங்கி நிற்கிறார் பிரதமர். அமைச்சரவை மாற்றத்துக்கு முன் சோனியாவும் பிரதமரும் நன்கு பேசியும் ஒருமித்து கருத்து ஏற்படவே இல்லை என்கிறார்கள்.

யாரை அமைச்சர் ஆக்கலாம் என்று பிரதமர் கருதுகிறாரோ அவரை நியமிக்கலாம் யாரிடமும் எந்த ஆலோசனையும் பெறாமல் இலாகாவை ஒதுக்கலாம். இது அவரது அதிகாரம்தான். ஆனால் சோனியாவும் சுற்றி உள்ளவர்களும் அதற்கு அனுமதிப்பது இல்லை. எனவே கபில்சிபல், ப.சிதம்பரம் ஆகிய இருவரிடம் மட்டும்தான் பிரதமர் மனம்விட்டுப் பேசுகிறார். மற்றவர்களிடம் பேசுவதைத் தவிர்க்கிறார் என்று சொல்கிறார்கள்.

விவசாயத்துறை அமைச்சரான சரத் பவார் அறிவிக்கப்படாத கிரிக்கெட் அமைச்சராகத் தொடர்கிறார். ஆனால் நாட்டில் சர்க்கரைத் தட்டுப்பாடு, மத்தி கோடௌன்களில் எலிகளின் லூட்டி ஆகியவற்றைத் தடுக்க அவர் எதையும் செய்யவில்லை. மின் தட்டுப்பாட்டை நீக்க சுசில்குமாரால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையில் அடுத்த நாட்டுத் தலைவரின் உரையைப் படித்து அவமானப்பட்டார் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா. வயலார் ரவி, சிவில் விமானத்துறையின் நஷ்டத்தைக் குறைக்க எதுவும் செய்யவில்லை. அன் புமணி ஊழல் செய்தாரா? என்பதை ஆராய்ச்சி செய்த சுகாதாரத்துறை அமைச்சர் குலாம் நபி ஆஷாத் தனது துறை நடவடிக்கைகளில் ஈடுபட வேயில்லை. மு.க.அழகிரியைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். ஆனால் இவர்கள் யாரையும் பிரதமரால் கைவைக்க முடியவில்லை. உள்ளூர் அரசியல், கூட்டணி அரசியல், சோனியாவின் குடும்ப விசுவாச அரசியல் போன்றவற்றால் தான் இவர்களை நீக்க முடியவில்லை. இந்தச் சிக்கல்கள் தெரியாமல் செயற்படாத பிரதமர் என்ற பட்டம் எனக்கு வருகிறதே என்று பிரதமர்

**ஜூனியர் விகடன்**

வருத்தப்படுகிறார் என்றும் சொல்கிறார்கள். இள இரத்தம் அமைச்சரவைக்கு வேண்டும் என்று பிரதமர் கேட்க... காங்கிரஸ் தலைமை மலிந்த் தேவ்ரா, ராஜஸ்தான் இராஜ குடும்பத்தின் ஜிதேந்திராவையும் சிபாரிசு செய்தது. இவர்கள் இருவரும் ராகுல் காந்தியின் ஆட்கள். பின்னர் எப்படி பிரதமர் சிரிக்க முடியும்?

சரோஜ் கண்பத்

## அங்கீகரிக்கப்படாத நிறம்சேர்க்கப்பட்ட உணவுகளை விற்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

மக்களின் பாவனைக்கு தகுதியற்ற நிறம் சேர்க்கப்பட்ட உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலான பல முறைப்பாடுகள் சுகாதார அமைச்சுக்கு கிடைத்துள்ளதை அடுத்து இதற்கான முழு அதிகாரத்தையும் உணவுப் பரிசோதகர்களுக்கு வழங்குவதற்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளை அரிசி, நிறமூட்டப்பட்டு சிவப்பரிசியாக விற்கப்பட்டுள்ளமை தொடர்பான தகவல்களும் வெளியாகியுள்ளதோடு ரோசசம்பா போன்ற பெயர்களில் இவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

இதுபோன்ற சில மீன் மற்றும் இறைச்சி வகைகளை புதியனவாக காண்பிப்பதற்காக நிறம் சேர்க்கப்பட்டு விற்பனை செய்தமை தொடர்பாக முறைப்பாடுகளும் முன்வைக்கப் பட்டுள்ளன.

புற்றுநோய்க்கு காரணமான நிறங்களை உணவுப் பொருட்களில் சேர்த்தல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்களை கருத்திற்கொண்டு உணவு பரிசோதகர்களுக்கு நாட்டின் எந்தவொரு பகுதியிலும் விற்பனைக்கு வைக்கப் பட்டுள்ள உணவுப்பொருட்களை பரிசோதிக்க கூடிய அதிகாரங்களை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. (ஸ்ரீ-2)

## சிகிரியா கோட்டைக்குள் நுழையும் இரகசிய வாயில்கள் கண்டுபிடிப்பு

காசியப்ப மன்னனின் பலம்வாய்ந்த கோட்டையாக விளங்கிய சிகிரியாவுக்கு பயணிப்பதற்காக அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் கிழக்கு மற்றும் வடக்கு இரகசிய வாயில்கள் இரண்டுகண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் காசியப்ப மன்னன் காலத்தில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் கட்டடங்களின் இடிபாடுகள், படிக்கட்டுகள் உள்ளிட்ட ஏராளமான கட்டட இடிபாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சிகிரியா வேலைத் திட்டத்தின் முகாமையாளர் வஜிரபர்மினென்டஸ் தெரிவித்தார்.

சிகிரியாவைச் சுற்றியுள்ள பாரிய காட்டின் சுமார் 6ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போதே இந்த இரகசிய வாயில்கள் மற்றும் கட்டட இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## முதல்வர் ஜெயலலிதாவுக்கு ஹிலாரி கிளிண்டன் அழைப்பு

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் இந்தியாவில் மேற்கொண்டு வரும் சுற்றுப் பயணத்தின் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் சென்னை வந்தார்.

சென்னைக் கோட்டையில் முதலமைச்சர் ஜெயலலிதாவை ஹிலாரி கிளின்டன் சந்தித்துப் பேசினார். ஒரு மணிநேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது இலங்கை பிரச்சினை, தமிழ்நாட்டில் அமெரிக்கத் தொழில் முதலீடு பற்றிப் பேச்சு நடந்தது.

இந்தச் சந்திப்பு சுமுகமாகவும் நல்லெண்ண அடிப்படையிலும் பரஸ்பர மரியாதையுடனும் இருந்தது. எதிர்காலத்தில் இது போன்ற பல்வேறு கலந்துரையாடல்களுக்கு வாய்ப்பு இருக்கும் என்று ஹிலாரி நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும் அவர் பேசும்போது, முதலமைச்சர் ஜெயலலிதா அமெரிக்காவிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார். அவரது வருகை தமிழ் நாட்டின் மிகப்பெரிய சாதனைகளை அமெரிக்கர்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமையும் என்று ஹிலாரி கிளின்டன் கூறினார். (ஸ்ரீ-2)

## திறந்த பல்கலைக்கழக அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த அனைத்து நாட்பாடசாலை விரிவுரைகளும் அன்றையதினம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி அதிகாரசபைகளின் தேர்தல்களின் நிமித்தம் நடைபெற மாட்டாது.

இதற்கான நாட்பாடசாலைகள் பிறிதொரு நாளில் நடைபெறுமென யாழ். பிராந்திய நிலையத்தினது இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி தேர்தலைபொட்டி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாளை நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கென விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் கடமைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நள்ளிரவுடன் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன. எனவே தேர்தல் நிறைவடையும் வரை எவரும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது. அதனையும் மீறி செயற்படுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கெதிராக கட்சி வேறுபாடின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் கூறினார்.


தேர்தல் பாதுகாப்பு கடமைகள் தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர், 65 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நாளை நடைபெறவுள்ளது. அதற்காக அந்தந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்டவுள்ள வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் விசேட பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதே போன்று வன்முறை மற்றும் அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருப்பதற்காக குறித்த பகுதிகளில் விசேட பொலிஸ் நடமாடும் சேவை மேற்கொள்ளப்படுவதுடன் விசேட பொலிஸ் அதிரடிப் படையினரும் அப்பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

வாக்காளர் அச்சமின்றி சுதந்திரமாக வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களிக்க முடியும். வாக்காளர்களுக்கு இடையூறு விளைவித்து குழப்பங்களை ஏற்படுத்த முயலும் எவருக்கும் அதற்காக இடமளிக்கப்படமாட்டாது என்றார். (ஸ்ரீ-4)

# மொழிக் கொள்கையை மீறும் அரச நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு



மொழிக்கொள்கையை மீறும் அரச நிறுவனங்களுக்கு எதிராக சட்ட தியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தேசியமொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையிலுள்ள அனைத்து மக்களும் தமது தாய் மொழியினூடாக கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய சமூகமொன்றை கட்டியெழுப்ப வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

யுத்தத்திற்குப் பின் இந்நிலமையானது மிகவும் செயற்றிறனுடனும் முன்னுரிமையளித்தும் செயற்படுத்தப்பட வேண்டுமென்று ஜனாதிபதி அதிக கவனம் செலுத்தியிருந்தார். அப்படியிருந்தும் சில அரச நிறுவனங்கள், அமைப்புக்கள் மற்றும் சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட சபைகள் இன்னும் சுற்றறிக்கைகளை சிங்கள மொழியினால் மாத்திரம் தயாரிக்கப்பட்டுவதனால் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலுள்ள அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் மிகவும் சிரமத்துக்குள்ளாக்கப்படுகின்றார்கள்.

இந்நிலைமையை மாற்றி குறைந்தது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரமேனும் சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்களை தயாரிக்க வேண்டுமென தெரிவித்திருந்தும் இதனை கவனத்தில் கொள்ளாது செயற்படுதல் தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பல தடவைகள் கூறியும் அரச கரும மொழிக்கொள்கையை மீறி செயற்படும் அனைத்து அரச நிறுவனங்களுக்கு எதிராகவும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நால்வருக்கு எதிராக வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் மீது கடந்த 2000 ஆம் ஆண்டு அட்டாளைச்சேனை மீனோடைக் கட்டு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பாக இரு வாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் முன்னாள் பட்டதாரி மாணவனும் தமண பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளருமான ஏ.எல்.எம். அஸ்லம் மானநட்ட வழக்கு ஒன்றை அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களான எம்.எஸ்.ஜலால்தீன், ஏ.எல்.முனாஸ், எம்.ஏ.என்.நுஜைல், ஏ.எம். இலாக், முன்னாள் துணைவேந்தர் ஹூசைன் இஸ்மாயில் ஆகியோருக்கு எதிராகவே இந்த வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் தன்னை தொடர்புபடுத்தி பொய் வாக்குமூலங்கள் வழங்கப்பட்டதால் தான் இரு வாரங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு வழக்குத் தொடரப்பட்டதால் தனது பரீட்சைப் பெறுபேறுகளும் இடை நிறுத்தப்பட்டதாகவும் தனக்கு இதனால் அவமானம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கு பொய்ச்சாட்சியங்களுடன் தொடுக்கப்பட்டது என்று தெரிவித்து சட்டமா அதிபரின் சிபாரிசையடுத்து தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் தான் சுற்றவாளி என நீதிமன்றத் தால் விடுதலை செய்யப்பட்டதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் பிரதிவாதிகளான ஐவரிடமிருந்து தலா 30 இலட்சம் ரூபா வீதம் 1.50 இலட்சம் ரூபாவை நட்டஈடாக பெற்றுத்தருமாறும் மனுவில் கோரியுள்ளார்.

சட்டத்தரணி யூ.எம். நியாஸின் வழிகாட்டலில் சட்டத்தரணி றோஸாக் அத்தரினால் இந்த வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. மேல் விசாரணை எதிர்வரும் ஒகஸ்ட் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

# இராணுவத்தின் கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டிற்கு அமெ.தூதுவர் பாராட்டு

(கொழும்பு)

கண்ணிவெடிகளை அகற்றுவதில் இலங்கை இராணுவம் மேற்கொண்டு வரும் பணிகளை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் நேற்று முன்தினம் புதன்கிழமை பாராட்டியுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்கு அமெரிக்க அரசாங்கத்தினால் நான்கு டாட்டா வாகனங்களை கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யுத்தத்தின் முடிவுக்கு பின் இலங்கை அரசாங்கத்திற்கு 80 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் நன்கொடை வழங்கப்பட்டுள்ளது. இது இந்த பணியை மேலும் முன்னெடுக்க உதவியாக இருக்கும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் பற்றீஸியா புட்டினிஸ் தெரிவித்தார்.

கண்ணிவெடி புதைக்கப்பட்ட 4 ஆயிரத்து 400 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தில் 300 சதுர கிலோ மீற்றர் நிலம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு விட்டதாக இந்நிகழ்வில் உரையாற்றி இராணுவ பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்தார்.

இதுவரையில் 3 இலட்சத்து 15 ஆயிரத்து 588 கண்ணிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# இலங்கையில் ஊடக அடக்குமுறை தொடர்கின்றது; எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பாதிக்கப்பட்டோர் இன்னமும் செய்தியாளர்களிடம் தமது கருத்துக்களை கூற பயப்படுவதாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

சர்வதேச நெருக்கடிகளுக்கான குழுவின் அறிக்கையின் அடிப்படையில் இந்த கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு கடந்த 19 ஆம் திகதி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அதில் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவருடைய அதிகாரம் மிக்க சகோதரர்களும் தொடர்பில் ஊடக அடக்குமுறையை கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் கருத்துரைத்துள்ள எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு, கடந்த காலங்களில் வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்ட கலாசாரத்தின் பாதிப்பு இன்னும் தொடர்வதாக கூறியுள்ளது.

இன்னமும் மக்கள் தமது கருத்துக்களை ஊடகங்களிடம் கூறுவதற்கு அச்சம் கொண்டிருப்பதாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறல் குறித்த இரகசிய கருத்தரங்கு கொழும்பில்

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறுதல் மற்றும் நல்லிணக்கம் உள்ளிட்ட ஏனைய விவகாரங்கள் தொடர்பான கருத்தரங்கு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பாத்தைன்டர் பவுண்டேசன் என்ற நிறுவனமே இந்தக் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

மிகவும் இரகசியமான முறையில்தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்ட இந்தக் கருத்தரங்கு இன்று காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை கோல்பெஸ் விடுதியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கிற்கு அமெரிக்கப் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் தலைமை தாங்கவுள்ளார்.

அதேவேளை இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற பரப்புரைகளை அமெரிக்காவே மேற்கொண்டு வருவதாக குற்றம்சாட்டி வருகின்ற இலங்கை அரசாங்கம் இந்தக் கருத்தரங்கிற்கு எப்படி அனுமதி வழங்கியது என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

குறிப்பாக அமெரிக்கப் பேராசிரியருக்கு வோஷிங்டனில் உள்ள இலங்கை தூதரகம் எவ்வாறு நுழைவிசைவு வழங்கியது என்றும் ஆங்கில ஊடகம் கேள்வி எழுப்பியுள்ளது. (ஸ்ரீ -2)







யா/பெரியபுலம் மகா வித்தியாலய செயற்பாட்டறை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார பிரதியமைச்சர் எம்.எஸ்.ஏ.ஹிஸ்புல்லா, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் உட்பட விருந்தினர்கள் பாண்ட் வாத்திய சகிதம் அழைத்து வரப்படுவதையும் பிரதி அமைச்சர் நாடாவை வெட்டி செயற்பாட்டறையைத் திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

# 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள்


ஆசிரியர் :- புண்ணியாமீன்


## பகுதி - I

☛ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**இல 1- 30 வரையிலான வினாக்களில் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன.**
**மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

0 1ம் 2ம் வினாக்களில் வெற்றுக் கட்டத்திற்கு வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.



1.



3.


☛ பின்வரும்' பகுதியை வாசித்து 3 - 6 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.


சுந்தரன் தொலைக்காட்சியின் முன் அமர்ந்து அதில் ஒலி, ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனருகில் வசுந்தரா மாமியும் பவித்ரா அக்காவும் அமர்ந்திருந்தார்கள். நாளை க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப் படவுள்ளதாக தொலைக்காட்சிச் செய்தியில் கூறப்பட்டது.சுந்தரன் அக்காவின் முகத்தைப் பார்த்தான். ஒருவித பயமும் மகிழ்ச்சியும் கலந்த நிலையில் அவளின் முகம் இருந்தது. அருகிலிருந்த மாமி மக்ள் நல்ல முறையில் சித்தியெய்துவாள் என்று அக்காவின் முதுகை வருடினார்.

3. சுந்தரன் மட்டுமே தொலைக்காட்சிச் செய்தியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.
   1. ஆம் 2. இல்லை 3. கூறமுடியாது
4. சுந்தரன் புலமைப்பரிசில் பரீட்சையை எழுதிவிட்டு பெறுபேற்றுக்காக காத்திருப்பவன்.
   1. ஆம் 2. இல்லை 3. கூறமுடியாது
5. வசுந்தரா மாமி ஓர் ஆசிரியை ஆவார்.
   1. ஆம் 2. இல்லை 3. கூறமுடியாது
6. க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை என்பது 11ஆம் தரத்தில் எழுதும் பரீட்சை ஆகும்.
   1. ஆம் 2. இல்லை 3. கூறமுடியாது


7. விடுகதை என்பது குறியீட்டு மொழியில்  என எழுத முடியுமாயின் கவிதை என்பதை குறியீட்டு மொழியில் எவ்வாறு எழுதலாம்.


8.  எனும் குறியீட்டு வடிவத்திற்கு பொருத்தமான தமிழ்ச் சொல் எது?
   1. சங்கமம் 2. குங்குமம் 3. சந்தனம்


☛ கட்டங்களின் எண்கள் அமைந்துள்ள கோலத்தை அவதானித்து வெற்றிடத்துக்கு வரவேண்டிய எண்ணைத் தெரிவுசெய்க.

9.


1. 72
2. 84
3. 60

10.


1. 6
2. 2
3. 5

11. சதுர வடிவான ஒரு கடதாசி Aயிலும் அதனை இரண்டாக மடித்துள்ள விதம் Bயிலும் அதனை இன்னும் இரண்டாக மடித்து அடையாளமிட்ட விதம் Cயிலும் காட்டப்படுகிறது. அடையாள மிடப்பட்ட பகுதியை வெட்டி அகற்றிய பின் விரித்துப் பார்த்தால் காணக்கூடிய உருவைத் தெரிவுசெய்க.



12. தாத்தா வீட்டுக்கு வந்த பின்பே அப்பா வீட்டுக்கு வந்தார். அப்பா வருவதற்கு முன்பதாக நான் வீட்டுக்கு வந்துவிட்டேன். அம்மா வீட்டுக்கு வந்தது அப்பா வருவதற்குச் சற்று முன்பாக ஆகும். இதன்படி கடைசியாக வீட்டுக்கு வந்தவர் யார்?
    1. தாத்தா 2. நான் 3. அப்பா

13. சுமனின் பெற்றோருக்கு 8 பிள்ளைகள் உள்ளனர். அதில் 4 பேர் ஆண் பிள்ளைகளாவர். சுமனுக்கு அண்ணாமாரோ, தங்கைமாரோ இல்லை எனின், சுமன் குடும்பத்தில் எத்தனையாவது பிள்ளை?
    1. முதலாவது 2. இரண்டாவது 3. ஐந்தாவது

14. வகுப்பொன்றில் 10 மாணவர்கள் ஒரே வரிசையில் அமர்ந்துள்ளனர். இரண்டு மாணவர்களுக்கிடையில் உள்ளவாறு அமர்ந்திருக்கக்கூடிய மாணவர்கள் எத்தனை பேர்?
    1. 9 பேர் 2. 8 பேர் 3. 7 பேர்

15. காவ்யா, திவ்யா, சுரம்யா, அமிரிதா ஆகிய நால்வரும் சதுரவடிவான மேசையின் நான்கு பக்கங்களிலும் அமர்ந்துள்ளனர். திவ்யாவின் இடதுபுறமாக சுரம்யா அமர்ந்திருக்கிறாள். காவ்யா அமர்ந்திருப்பது திவ்யாவின் வலது புறமாக அல்ல. அமிர்தாவுக்கு எதிர்த்திசையில் அமர்ந்திருப்பவர் யார்?
    1. காவ்யா 2. திவ்யா 3. சுரம்யா

16. நாளை மறுநாள் சனிக்கிழமை எனின், நேற்று முன்தினம் என்ன கிழமையாகும்?
    1. வியாழன் 2. புதன் 3. செவ்வாய்


17. அறிவாளிக்கு கல்வி எனின், தனவந்தனுக்கு ....
    1. பணம் 2. செல்வம் 3. அறிவு


18. ஓவியத்துக்கு ஓவியன் எனின், புத்தகத்துக்கு...
    1. எழுத்தாளன் 2. வாசிப்பவன் 3. புத்தகக் கடைக்காரன்

19. [1545] — [5451] — [4515] — [?] வெற்றுக்கூட்டத்துக்கு வரவேண்டிய எண்
    1. 5145 2. 1545 3. 5154

20. [45X9] - 127 = 278 எனும் கணிதச் செய்கையில் கட்டமிடப்பட்டுள்ள பெறுமானத்துக்கு சமனாக வரக்கூடிய மற்றுமொரு செய்கையாக இருப்பது.
    1. 200+195 2. 188+207 3. 136+269

☛ **21ம், 22ம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களில் ஒன்றுடனொன்று பொருத்தமில்லாத உருக்கூட்டத்தைத் தெரிவுசெய்க.**

21.


22.


23.


அருகிலுள்ள 3 பாத்திரங்களிலும் உள்ள திரவத்தின் அளவு யாது?
    1. 1400மி.லீற்றர் 2. 1300மி.லீற்றர் 3. 1200மி.லீற்றர்

24. வயல்நிலமொன்றில் பெரும்பாலும் காணக்கூடியவற்றை உள்ளடக்கிய விடை எது?
    1. நெற்பயிர், சேறு, வெருளி, நீர்
    2. நீர், நெற்பயிர், சேறு, களை
    3. சேறு, நீர், குருவி, களை

# இலங்கை அகதியை கொடுமைப்படுத்திய கணவரும் மாமனாரும் பொலிஸாரால் கைது

இலங்கை அகதியான மனைவியிடம் சீதனம் கேட்டு கொடுமைப்படுத்தியதாக மதுரை வைத்தியசாலை பணியாளரும் தந்தையும் கைது செய்யப்பட்டுள்ளனர் என இந்திய ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

மதுரை ரேஸ்கோர்ஸ் காலனியை சேர்ந்தவர் ராம்கணேஷ் வயது 30. இவரது மனைவி புஷ்பா வயது 29. இலங்கை அகதியான இவர் தல்லா குளம் அனைத்து மகளிர் பொலிஸ் நிலையத்தில் செய்துள்ள முறைப்பாட்டில் எனக்கும், நாங்கள் குடியிருந்த பகுதியில் வசிக்கும் வெங்கட்ராஜ் வயது 56 என்பவரது மகன் ராம் கணேசுக்கும் வயது 30 கடந்த 6.5.2005 அன்று திருமணம் நடந்தது. எனது பெற்றோர் தரப்பில் 8பவுண் நகைகள் மற்றும் இந்திய ரூபா 2 இலட்சத்தை வரதட்சணையாக கொடுத்தனர்.

ராம் கணேஷ் மதுரை பெரிய வைத்தியசாலையில் உள்ள சத்திரசிகிச்சை பிரிவின் தொழில்நுட்ப பிரிவில் வேலை பார்த்து வருகிறார். அவருக்கு ஏற்கனவே அவரது அத்தையான லட்சுமியின் மகள் ராஜகுமாரியை திருமணம் செய்ய முடிவு செய்தார்கள். ஆனால் சில காரணங்களால் அது நடைபெறவில்லை.

ராஜகுமாரிக்கு வேறு இடத்தில் திருமணம் முடிந்து குழந்தைகள் உள்ள நிலையில் அவர் கணவரை பிரிந்து வாழ்ந்து வருகிறார். அவருக்கும் எனது கணவருக்கும் இடையே தொடர்பு இருந்து வருகிறது. இதனால் என் கணவர் என்னை அடித்து உதைத்து சித்திரவதை செய்து வந்தார்.

இதற்கிடையே எனக்கு ஒரு குழந்தை பிறந்தது. அவனை என் தாயாரிடம் ஒப்படைத்து விட்டு லெபனான் நாட்டுக்கு நான் வேலைக்கு சென்றேன்.

ராஜகுமாரியை என் கணவர் திருமணம் செய்ய கொள்ளாமல் இருக்க எனது சம்பளத்தை அனுப்ப வேண்டும் என்று கேட்டதால் நான் இந்திய ரூபா 2 இலட்சத்து 30 ஆயிரத்தை அவருக்கு அனுப்பி வைத்தேன்.

தற்போது நான் திரும்பி வந்த நிலையில் என்னிடம் இருந்த இந்திய ரூபா 75 ஆயிரத்தையும் அவர் வாங்கிக்கொண்டார்.

ஆனால் என் கணவரும் அவரது தந்தை மற்றும் தஞ்சையில் வசிக்கும் ராஜகுமாரி அவரது தாயார் லட்சுமி, பெரியம்மா மாரியம்பாள் ஆகியோர் என்னைத் தொடர்ந்து கொடுமைப்படுத்தி வருகிறார்கள்.

நான் வீட்டை விட்டு வெளியேறினால் தான் ராஜகுமாரிக்கும் என் கணவருக்கும் திருமணம் செய்ய முடியும் என்று நினைத்து இப்படி நடந்து கொள்கிறார்கள்.

எனவே அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் கூறப்பட்டு இருந்தது.

இந்தப்புகார் தொடர்பாக விசாரணை நடத்திய பொலிஸார் ராம்கணேஷ், அவரது தந்தை வெங்கட்ராஜ் ஆகியோரை கைது செய்து மதுரை 2 ஆவது ஜுடிசியல் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

அவர்களை எதிர்வரும் ஓகஸ்ட் 2 ஆம் திகதி வரை காவலில் வைக்கும் படி நீதிவான் உமாமகேஸ்வரி உத்தரவிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பன்னாலை தரிசு நிலங்களில் சட்டவிரோத கல் அகழ்வு

## விவ்சாயிகள் பெரும் பாதிப்பு

அச்சுவேலி தெற்கு பன்னாலை ஆட்டுப் பட்டிப் பகுதியிலுள்ள தரிசு நிலங்களில் இடம்பெற்றுவரும் சட்டவிரோதமான கல் அகழ்வு நடவடிக்கைகளால் விவசாயிகள் பெரும்பாதிப்பு அடைந்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

மேலும் மழைக் காலங்களில் வல்வைக் கடல் நீர் இப் பள்ளமான பகுதிகளில் உட்புகுவதால் விவசாய நிலங்கள் உவர் நீர்ப் பகுதியாக மாறுவதுடன் போக்குவரத்து செய்யும் வீதிகளும் சேதமடைகின்றது. எனவே சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் இதனை தடுத்து நிறுத்த வேண்டுமென அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ஸ்ரீ-70)

# புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட கப்பலை மீட்கப் புறப்பட்ட கப்பல் மாயம்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள புல்மோட்டைக் கடல் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் மூழ்கடிக்கப்பட்ட இலங்கைக் கடற்படைக் கப்பலை மீட்பதற்கு கடந்த 10 ஆம் திகதி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து புறப்பட்டு திருகோணமலை நோக்கி வந்த கப்பல் ஒன்று மர்மமான முறையில் காணாமல் போய் உள்ளது.

இக்கப்பலின் பெயர் குவின் மேரி. ஈராக்கில் பதிவு செய்யப்பட்ட இக்கப்பல் வெள்ளை நிறம் உடையது. பூம்ஹிகோ பொறியியல் நிலையத்துக்கு சொந்தமான இது இலங்கையால் வாடகைக்கு எடுக்கப்பட்டு இருந்தது.

மூன்று நங்கூரங்கள், 55 தொன் எடை உடைய பாரந்தூக்கி, மின்பிறப்பாக்கி இயந்திரம் ஆகியன கப்பலில் இருந்து உள்ளன. கப்பலின் பெறுமதி மூன்று கோடி ரூபாய் ஆகும்.

கப்பலின் தலைவர் ஒரு இந்தியர் ஆவார். இலங்கைப் பொறியியலாளர்கள் இருவர் உட்பட 12 பேர் கடமையில் ஈடுபட்டு இருந்தனர்.

இக்கப்பல் காணாமல் போய் இருப்பது குறித்து இலங்கைப் பொலிஸார் மற்றும் படையினருக்கும் சர்வதேச பொலிஸாருக்கும் முறையிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளை அரசாங்கம் மீறிச் செயற்படுகிறது

## கரு ஜயசூரிய எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளை அரசாங்கம் மீறிச் செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் அமுல்படுத்தப்படுகின்றனவா என கண்காணிக்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்க சொத்துக்கள் உச்ச அளவில் பயன்படுத்தப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனநாயகத்தை ஒடுக்குமுறைக்கு உட்படுத்தும் வகையிலான செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எழுத்து, பேச்சு சுதந்திரத்தை முடக்கி வரும் அரசாங்கத்தின் பயணம் தடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# யுனிசெப் வதிவிட பிரதிநிதி முல்லைத்தீவுக்கு விஜயம்

யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி றிஸாஹஸைனி தலைமையிலான குழுவினர் கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்திற்கான விஜயமொன்றை மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்ததாக முல்லைத்தீவு மாவட்டத்தின் அரசாங்க அதிபர் எ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களின் தற்போதைய நிலவரம், அவர்களின் தேவைப்பாடுகள், கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் குறித்து மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடலொன்று நடைபெற்றதாகவும் அவர் கூறினார்.

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க பிரிவில் புதிதாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களான உடையார்கட்டு வடக்கு, சுதந்திரபுரம், தேவிபுரம் ஆகிய கிராமங்களையும் யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி சென்று பார்வையிட்டார்.

அத்துடன் கிராமோதயா சுகாதார நிலையம், பாடசாலைகள், புதுக்குடியிருப்பு வைத்தியசாலை ஆகியவற்றுக்கு நிதியுதவி வழங்கும் நோக்கில் அவற்றினையும் அவர் சென்று பார்வையிட்டதாக அரச அதிபர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# கடன் இணக்க சபையில் நீதிபதிகளை இணைத்துக் கொள்ள அரசு தீர்மானம்

(கொழும்பு)

கடன் இணக்க சபையில் நீதிபதிகளை இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் கடந்த 19 ஆம் திகதி சபையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இணக்க சபையின் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பிலும் திருத்தங்கள் மேற்கொள் ளப்படவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கடன் இணக்க கட்டளைச்சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இங்கு மேலும் கூறுகையில்,

கடன் இணக்க சட்ட திருத்தங்களின் மூலமாக மத்தியஸ்த சபையின் செயற்பாடுகளில் நீதிபதிகளையும் இணைத்துக் கொள்ளும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

கடன் இணக்க சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்கும் வகையில் கடன் இணக்க கட்டளைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள ஏற்படாகியுள்ளது.

இது தொடர்பிலான விசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியாகியுள்ளது. கடன் இணக்க சபைத் தலைவருக்கான போக்குவரத்து செலவுக்கென 750 ரூபாவும் உறுப்பினர்களுக்கான போக்குவரத்துச் செலவுக்கென 500 ரூபாவும் என கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவிருக்கின்ற அதேவேளை வெளியிட கடமைகளுக்கு செல்கையில் மேலதிகமாக 500 ரூபாவும் வழங்கப்படும்.


கடன் இணக்க கட்டளைச் சட்டமானது 2005 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது. இந்த சபையின் மூலம் அடகு சம்பந்தப்பட்ட விடயத்தில் இருதரப்பின்ருக்குமிடையேயான முறுகல் நிலைக்கு தீர்வுகளை எட்ட முடியும்.

இதேவேளை சொத்துரிமை மாற்றம் தொடர்பிலும் இங்கு திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் பிரகாரம் வங்கிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கிடையிலான பிரச்சினைகள் ஏற்படும் போது கடன் இணக்க சபை தலையீடு செய்து பிரச்சினைகளை தீர்த்து வைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

கடந்த வருடத்தில் மாத்திரம் இவ்வாறு 638 பிரச்சினைகளை சபை தலையிட்டு தீர்த்து வைத்துள்ளது.

அதில் 439 வழக்குகள் முடிபுகளை எட்டியுள்ளன. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட மத்தியஸ்த சபை திருத்தங்கள் மூலம் நீதிமன்ற அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டன. (ஸ்ரீ-2)

# முன்னாள் இராணுவத் தளபதியின் போர் அனுபவங்கள் அடங்கிய நூல் வெளியீடு




(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி லெப் ஜெனரல் ஜெரி டி சில்வா தனது இராணுவ மற்றும் போர் அனுபவங்களை உள்ளடக்கிய நூல் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார்.

மிக உன்னதமான தொழில் என்ற தலைப்பிலான இந்த நூலின் வெளியிட்டு விழா நேற்று முன்தினம் ரமடா விடுதியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்க பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் லெப் ஜெனரல் ஜெரி டி சில்வா நூலின் முதல் பிரதியை வழங்கினார்.

1993 ஆம் ஆண்டு நவம்பரில் பூநகரியில் இலங்கைப் படைகளுக்கு ஏற்பட்ட பாரிய பின்னடைவை அடுத்து அப்போதைய இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன ஓய்வு பெற்றுச் சென்றார்.

அதன் பின்னர் 1994 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்ற லெப் ஜெனரல் ஜெரி டி சில்வா 1996 ஆம் ஏப்ரல் மாதம் வரை அந்தப் பதவியில் இருந்தார்.

பின்னர் பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவராக இரண்டு ஆண்டுகள் பதவி வகித்திருந்தார்.

இவர் 1987 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேசன் லிபரேசன் 1995 இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ஒப்பரேசன் ரிவிரெச உள்ளிட்ட வடக்கில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# உற்றறி கோட்பாடு

## பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை

04



பேராசிரியர் சபா ஜெயராசா

### உற்றறிகோட்பாடு இலக்கியங்களை விளங்கிக்கொள்வதற்குரிய வழிமுறையாதல்

மொழி நிலை....

வசனங்கள் இன்றி கருத்து வின்னப்பாடுகளை (Discourses) மேற்கொள்ள முடியாது. வசனங்களின் ஒழுங்கமைப்பினால் கருத்து வினைப்பாடு கட்டமைப்புச் செய்யப் படுகின்றது. அது இன்னொரு வகையான மொழியாக முகிழ்த்தெழுகின்றது.(Barches,1977:823) வசனங்களுக்கு மேலான செயற்பாடுகள் கருத்து வினைப்பாட்டிலே தொழிற்பட்ட வண்ணம் இருத்தல் அதன் விளக்கமாகின்றது.

எடுத்துரைப்பியல்

இதனை மேலும் விளங்கிக் கொள்வதற்கு "எடுத்துரைப்பியல்" (Narrtology) பற்றி விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. எடுத்துரைப்பு மனிதவாழ்வின் அடிப்படையான பண்புகளுள் ஒன்றாக அமைகின்றது.

இலக்கிய ஆக்கத்தில் எடுத்துரைப்பு சிறப்பான செயற்பாடாக இருத்தலினால் அது பற்றி விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. எ.எம். பொஸ்டர் என்பார் தாம் எழுதிய நாவலின் பண்புகள் (Aspects of the novel,1926) என்ற நூலில் கதை (Story) என்பதற்கும் பொதிவு (Plot) என்பதற்கும் இடையே வேறுபாட்டை வலியுறுத்தியுள்ளார்.

அ) "அரசன் இறந்தான் அதைத் தொடர்ந்து அரசியும்இறந்தாள்" என்பது கதை.

ஆ) அரசன் இறந்தான் அந்தச் சோகத்தில் அரசியும் இறந்தாள் என்பது பொதிவு

பொதிவு என்பது நிகழச்சியின் காரணங்களை உளநிலை அமைவுடன் தொடர்புபடுத்தி நிலைமாற்றம் செய்கின்றது. எடுத்துரைப்பில் இந்த இரு நிலைகளையும் பற்றி வேறு பல திறனாய்வாளரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நிகழ்ச்சிக்குரிய காரணம் பற்றி புனைவு, கதையைப் பொதிவாக மாற்றி விடுகின்றது என்று பொஸ்டர் குறிப்பிட்டுள்ளார். அதாவது கதையை கருத்து வினைப்பாடாக மாற்றி விடுகின்றது.


எடுத்துரைப்பியல் ஆய்வாளர்களுள் முக்கியமான ஒருவராக விளாடிமிர் புரொப் விளங்குகின்றார். ரஷிய நாட்டவர் கதைகளில் ஏழுதளங்களில் வினைப்பாட நிகழ்வதாக அவர் சுட்டிக்காட்டினார். அயையாவன,

1) வில்லன்
2) வளங்குனர்
3) துணைசெய்யபவர்
4) நபரைத்தேடல்
5) எடுத்துத் தருபவர்
6) தலைவர்
7) போலித்தலைவர்

கிறிஸ்மாஸ் (Greimas) - என்பவர் எடுத்துரைப்பின் தொடரணியை பின்வருமாறு அடுக்கமைத்துக் கீாட்டுகின்றார்.

1) ஆற்றுகை மற்றும் செயற்பணி முதலியவற்றை தொடர்புபடுத்துதல்.
2) முடிவை நோக்கிய வினைப்பாடு
3) கதை அசைவும் பெயர்ச்சிகளும்.
4) வினைப்பாடுகளைக் கோடல் (Code) செய்தல்,தொடர்ச்சியாக பொதிவை ஒழுங்கமைத்தல்
5) புதிர்களைக் கோடல் செய்தல்
6) பண்பாட்டைக் கோடல் செய்தல்
7) நபர்களையும் பாத்திரங்களையும்கோடல் செய்தல்
8. குறியீட்டுக் கோடல் செய்தல்

கோடல் (Code) என்பது குறியீடுகளுக்குப் பொருளுரைக்கும் ஒழுங்கமைந்த விதிகளைக் குறிப்பிடுகின்றது. பார்த் அவர்கள் தாம் எழுதிய S/Z என்ற நூலில் (Barthes,1974) எடுத்துரைப்பின் அமைப்பியற் பகுப்பாய்வையும் கோடல்களையும் அவற்றின்



பேராசிரியர் சு.வித்தியானந்தன்

விளக்கங்களையும் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்

1. கதையின் ஒவ்வோர் வினைப் பாட்டு அலகையும் விளக்கும் கோடல். சிறிய வினைப்பாட்டிலிருந்து பெரிய வினைப்பாடுகள் வரை அது அமையும். ஆனால் கூறியது கூறல் அங்கு இடம்பெறாது.

2. புதிர் மற்றும் வினாக்களை உள்ளடக்கிய கோடல் - அவை தீர்க்கப்பட்டவையாயிருக்கலாம். - அல்லது தீர்க்கப்படாதவையாக இருக்கலாம்.

3. பண்பாட்டுக்கோடல் - அனைத்துக் கூறுகளும் அனைவாலும் பகிர்ந்து கொள்ளப்படத்தக்க அறிவுடன் தொடர்புடையனவாயிருக்கும்

(தொடரும்)

# செய்தொழிலின் பொருந்தா நிலை உள நோய்க்கு அத்திவாரமிடுகிறது

ஒருவர் செய்யும் தொழில் சில சமயங்களில் அவர்களை மனநோயாயளி ஆக்கிவிடுகின்றது என சமகால உளவியல் ஆராய்ச்சிகள் உறுதிப் படுத்தியுள்ளன.

சமுதாய வளர்ச்சிக்கு ஏற்பவும் மக்கள் மனநிலையும் மாறி வருகின்றது. இதனால் மனிதன் மனிதத்துவத்தை இழந்து பொருள் சேர்தத்தல், போட்டி, பொறாமை, எல்லாவற்றையும் அனுபவித்து விடவேண்டும் என்ற துடிப்பு, அடக்கியாள வேண்டும் என்ற எண்ணம் , பதவி உயர்வு அடையும் ஆசை, தான் மதிக்கப்பட வேண்டும் என்ற எதிர் பார்ப்பு போன்றவற்றால் தினம் தினம் அலைக்கழிகப்படுகிறான். இது சாந்த நினைவுகளால் மனதளவில் பெரும் துன்பப்படுகிறான். இத் துத்துன்பமும் ஏக்கமும் படிப் படியாக அதிகரித்து அவனுடைய மனநிலையைப் பாதிக்கின்றது. இவ்வாறான மன நிலைப்பாதிப்புக்கள் அவனுக்கு எரிச்சல், சினம், கோபம், பதற்றம், இரத்த அழுத்தம் போன்ற உளவியல் பிர்சினைகளை ஏற்படுத்துகின்றது. இதனால் குடும்பத்தைச் சரியாக கவனிக்க முடியாமலும் மற்றவர்களுடன் நல்ல உறவைப் பேண முடியாமலும் அமைதியின்றித் தவிக்கின்றான்.

முழுமையாகத் தனது தொழிலிலும் தொழில் முன்னேற்றத்திலும் பதவி உயர்விலும் தலைமைத்துவத்தை அடைய முனைவதிலும் தனது சிந்தனையையும் கவனத்தையும் செலவழிப்பதால் நிம்மதியின்றித் தவிக்கின்றான். இதனால் குடும்பத்தில் நிம்மதியினை இழக்க வேண்டியிருக்கிறது. இது படிப்படியாக அதிகரித்து இறுதியில் மனநலம் பாதிக்கப்பட்டு ஓர் மன நோயாளிக்குரிய அறிகுறிகள் அவனது செயலில் காணப்படும். சில சமயம் அவனை இது நிரந்தர மன நோயாளியாக்கி விடுகின்றது.

உளவியலாளரான ஜோன் பிரஞ்ச், மனநோய்க்குக் காரணம் ஒருவர் தாம் ஈடுபட்டிருக்கும் தொழில் சம்பந்தப் பட்டது என்கிறார். "இன்றைய தொழிலாளர் அமைப்புக்கள், அவர்களின் உடல், மனச்சீர்கேடுகளையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஒரு தொழிலாளி இறந்தாலோ, முடமானாலோ அதற்குக் காரணம் அவனுடைய குடும்பம் மட்டுமல்லாது, அந்த தொழில் அமைப்பும்தான் என்றே கூற வேண்டும்.

பிரஞ்சின் கருத்துப்படி, அண்மையில் நடத்திய கணக்கெடுப்பில் பொதுவாக சில காரணங்களைக் கண்டறிந்தார். "அதாவது சுமார் 35 சதவிகித தொழிலாளர்களைப் பேட்டி கண்டதில் அவர்கள் நம்பிக்கையின்மை, அதிருப்தி, பொறுப்பின்மை கொண்டவர்களாக இருப்பதை அறிய முடிந்தது. சுமார் 48 சதவிகித தொழிலாளர்கள் இவைகளுக்கிடையே ஊசலாடும் மனநிலையை வெளியிட்டார்கள். பொதுவாக 50 சதவிகிதத் தொழிலாளர்கள் தங்களுடைய சக்திக்கு மீறிய தொழில்களை தினமும் செய்து முடிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதாகக் கூறினர்.

மற்றைய இடங்களில் தொழிலாளர்களைச் சந்தித்ததில் தாங்கள் ஈடுபட்டுள்ள தொழில்களுக்கு அப்பால் அவர்களுக்கு உற்சாகம் அளிக்கக் கூடிய சூழல் இல்லையென்கிற கருத்துத் தெரியவந்தது. வேலைப் பழுவால் ஏற்படும் தளர்ச்சியின் காரணமாக தொழிலில் ஒத்துழைப்புத்தர முடியாத சோர்வு, பொருட்களின் உற்பத்தியைப் பாதிக்கிறது" என்கிறார்.

"முன்யோசனையின்றி அவன் அதை எதிர்த்துக் கடுமையாப் போராடுகிறான். அவனுடைய இரத்தத்தில் அதிரினல் அமிலங்கள் திடீரெனச் சுரந்து நாடித் துடிப்பையும், சுவாசத்தையும், இரத்த அழுத்தத்தையும் பாதித்து தசைகளையும், மூளையையும் அதிவேகத்துடன் இயங்கச் செய்கிறது" எனவும் மேலும் குறிப் பிடுகிறார்.

மன அழுத்த நோய் சம்பந்தப் பட்ட நிபுணர்கள் உடல் உழைப் பாளர்களுக்குள் நிகழும் இந்த இரசாயன இயக்கம் பற்றிச் சொல்லும் கருத்துக்கள் தெளிவாக இல்லை.

கலாநிதி க.கஜவிந்தன்
உளவியல் விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்

கனடாவைச்சேர்ந்த ஹானஸ் செலி என்ற பிரபல் நிபுணர் இது பற்றிக் கூறிவந்த போது, இந்த மன அழுத்தத்தை கட்டுப்படுத்தும் திறன் உடலில் படிந்துள்ள எண்ணைச் சத்துக்கள் சம்பந்தப்பட்டவைகளுக்கே உண்டு என்கிறார். ஒருவருடைய தொழிலினால், அடிக்கடி மன அழுத்தம், நிம்மதியின்மை, பதற்றம் ஏற்படுமேயானால் அவர் மிகக் குறுகிய காலத்திலேயே இருதய நோய்க்கு ஆளாவார்.

(தொடரும்)

# ஆடி மாத இராசி பலன்கள்




(மூலம்,பூராடம், உத்தராடம் முதலாம் பாதம்)

**கனவுகள் நனவாகும் நேரம்!**

*தொட்ட காரியங்கள் அனைத்தும் வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கும் தனுசு இராசி அன்பர்களே!*

பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணம் உங்களுக்கு உண்டு. ஆனால் செய்த உதவிக்கு நன்றி காட்டவில்லையே என்ற எண்ணத்துடன் கவலைப்படுவீர்கள். பெரியவர்களையும் குருவையும் பின்பற்றி அவர்கள் ஆலோசனைகளைக் கேட்டு நீங்கள் நடப்பதால் உங்களுக்கு வரும் சுகங்களையோ துயரங்களையோ மற்றவர்களிடம் சொல்ல மாட்டீர்கள். மற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலேயே உங்கள் குறிக்கோள் அதிகமாயிருக்கும்.

உங்களுக்கு இந்த ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது நல்ல வாய்ப்புகள் பலவும் உங்களை நாடி வரும் என்றே சொல்ல வேண்டும். வளர்ச்சிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கப் போகிறீர்கள். மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 10 இல் தனாதிபதி சனி பலம் பெறுவதால் தொழில் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்போடு செய்யும் கூட்டுத் தொழிலில் இலாபம் கூடுதலாக வந்து சேரும்.

விரயாதிபதி செவ்வாய் 6 இல் சஞ்சரித்து விபரீத இராஜ யோகத்தை உருவாக்கும் விதத்தில் உலா வருவதால் நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியங்கள் பலவற்றையும் செய்து முடிப்பீர்கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வருங்கால நலன்கருதி எடுத்த புது முயற்சிகளும் வெற்றி பெறும்.

சென்ற மாதத்தில் வரவேண்டிய பாக்கிகள் இந்த மாதத்தில் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வி.ஆர்.எஸ். பெற்றுக் கொண்டு விருப்ப ஓய்வில் வந்து சுயதொழில் தொடங்க முன்வருவர். அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு. அஷ்டமாதிபதி சந்திரன் மாதத் தொடக்கத்தில் குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் குடும்ப ஒற்றுமை மட்டும் குறையலாம். எனவே மற்றவர்கள் மனதைப் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது.

நாளைமறுதினம் 24 ஆம் திகதி மிதுன இராசியில் விரயாதிபதி பஞ்சமாதிபதியாக விளங்கும் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதனால் பிள்ளைகள் வழியில் விரங்கள் உருவாகலாம். பழைய சொத்துக்களை விற்பனை செய்து விட்டுப் புதிய சொத்துக்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். உடன்பிறப்புக்கள் உங்களோடு இணைந்து செயற்படுவர். குரு பார்வையால் உங்கள் இராசி புனிதமடைவதால் காரியங்கள் கடைசி நேரத்திலாவது கைகூடிவிடும்.

நாளைமறுதினம் 24 ஆம் திகதி சுகம் தரும் சுக்ரன் 12 இல் சஞ்சரிக்கப் போகிறார்.எனவே வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள வாய்ப்புகள் கைகூடிவரும். 6 க்கு அதிபதி சுக்ரன் 8 இல் சஞ்சரிக்கும் போது விபரீத இராஜ யோக அடிப்படையில் வெற்றி வாய்ப்புக்கள் வீடு தேடி வரப் போகின்றன.பெண் வழிப் பிரச்சினை அகலும். பிறருக்காக வாங்கிக் கொடுத்த தொகையும் வந்து சேரும். மண், பூமி வாங்க போட்ட திட்டங்கள் மகத்தாக நிறைவேறும்.

இம்மாத தொடக்கத்திலேயே 12 இல் இராகு சஞ்சரிப்பதால் பயணங்கள் அதிகரிக்கும் வாகனப் பழுதுச் செலவுகள் கூடும். சூரிய-புதன் சேர்க்கை எட்டில் ஏற்படுபவது அவ்வளவு நல்லதல்ல. அரசுவழி தொல்லைகளுக்கு ஆளாக நேரிடலாம். எனவே அனுமன் கவசம் பாடி சனிக்கிழமை தோறும் வழிபாடு செய்தால் இனிய வாழ்வு மலரும்.

இம்மாதம் குரு பலம் நன்றாக இருப்பதால் உறவினர் பகை அகலும். உங்களுடைய முன்னேற்றம் கண்டு உடன் இருப்பவர்களே ஆச்சரியப்படுவர். நோய் அகலும். கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். புத்திரப்பேறு உண்டாவதற்கான அறிகுறிகள் தோன்றும். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பதவிகள் வந்து சேரும். நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றும் மாதமாக ஆடி மாதம் அமையப்போகிறது.

விரய ஸ்தானத்தில் இராகுபலம் பெறுவதால் சர்ப்ப சாந்தி செய்வதன் மூலமும் துர்க்கை மற்றும் காளி வழிபாட்டினை செவ்வாய்க்கிழமை தோறும் தொடர்ந்து செய்வதன் மூலமும் தொல்லைகளிலிருந்து விடுபடலாம்.




(உத்தராடம்2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம்,அவிட்டம்1,2 ஆம் பாதம்)

**அதிக செலவு செய்ய வைக்கும் அர்த்தாஷ்டம குரு!**

*எதிர்காலத்தைப் பற்றியே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருக்கும் மகர இராசி நேயர்களே!*

எதையும் நிதானமாகச் செய்தால் நிச்சயம் வெற்றி பெறலாம் என்று சொல்பவர்கள் நீங்கள்.சிரித்த முகமும் செயற்திறனும் கொண்டவர்களோடு மட்டுமே பழக்கம் வைத்திருக்க விரும்புவீர்கள்.

உறவினர் பகையும் உடன் இருப்பவர்களால் தொல்லையும் உங்களோடு இணைந்தே இருக்கும். கற்ற கல்வியை விடப் பெற்ற அனுபவங்களே ஏராளமாக இவர்களுக்கு உண்டு என்பதால் பலரும் தங்கள் குறைகளை ஒன்றுவிடாமல் உங்களிடம் சொல்லி ஆறுதல் பெறுவர்.

உங்களுக்கு ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே அஷ்டமாதிபதி சூரியன் உங்கள் இராசியைப் பார்ப்பதால் எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வதே நல்லது. இல்லத்தில் இருப்பவர்களால் தொல்லைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

அர்த்தாஷ்டமக் குருவின் ஆதிக்கமும் வலுவாக இருப்பதால் நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய முடியுமா? என்பது சந்தேகம்தான்.

எதைச் செய்தாலும் குடும்ப உறுப்பினர்களைக் கலந்து ஆலோசித்து செய்வது நல்லது. பஞ்சம ஸ்தானத்தில் கேதுசஞ்சரிக்கிறார். எனவே பிள்ளைகளால் ஏற்படும் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பது நல்லது. இராகுவும் உங்கள் இராசியைப் பார்ப்பதால் உடல் ஆரோக்கியத்தில் தொல்லைகள் உருவாகலாம். உடனுக்குடன் மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

வார வழிபாடாக குருவை வழிபடுவதோடு வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து வந்தால் வியக்கும் அளவு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும்.

சனிப் பெயர்ச்சிக்குப் பிறகே ஓரளவு சாதகமான பலன் அமையும் என்பதால் அதுவரை பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. அது மட்டுமல்ல குடும்பத்திலும் விட்டுக் கொடுத்துச் செல்வது மூலமே வெற்றியை வரவழைத்துக் கொள்ள இயலும்.

நாளைமறுதினம் 24 ஆம் திகதி மிதுன இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 4,11 இக்கு அதிபதி 6 இல் சஞ்சரிக்கும் போது பெற்றோர் வழியில் பிரியம் குறையலாம். உற்றார், உறவினர்களின் எதிர்ப்புகள் உருவாகாமல் பார்த்துக் கொள்வது உத்தமம். உத்தியோகத்தில் எதிர்பாராத சலுகைகள் கிடைத்தாலும் நிம்மதி இருக்காது.

பூர்வீக சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும். பழைய கடன்கள் நிவர்த்தியாகும்.புதிய கடன்கள் உருவாக வாய்ப்புண்டு. எனவே வரவு அறிந்து செலவு செய்வதும் வழிபாட்டில் கவனம் செலுத்துவதும் இக்காலத்தில் உகந்ததாகும்.

நாளைமறுதினம் 24 ஆம் திகதி கடக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 5,10 இக்கு அதிபதி 7 இல் சஞ்சரிக்கும் போது தொழில் முன்னேற்றம் கூடும். சுபச் செய்திகள் வந்து சேரும். பிள்ளைகளின் கல்வி நலன் கருதி கடல் தாண்டும் முயற்சிக்கு கைகொடுத்து உதவ நண்பர்கள் முன்வருவர். பெண் வழிப்பகை மாறும். அந்நிய தேச வாய்ப்புகள் அலைமோதும்.

இம்மாதம் இனிய மாதமாக அமைய சந்திர வழிபாட்டை பௌர்ணமி அன்று மேற்கொள்வது நல்லது. பாக்கிய ஸ்தானத்தில் கேது பலம் பெறுவதால் விநாயகர் வழிபாட்டையும் முறையாக மேற்கொள்வது நல்லது.

இம்மாதம் அனைவரையும் அனுசரித்துச் செல்ல வேண்டிய மாதமாகும். எதையும் செய்வதற்கு முன்னால் சிந்தியுங்கள். அடுத்தவர்களைப் பற்றி விமர்சிப்பதைத் தவிர்ப்பது நல்லது.

குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகள் கணவன்-மனைவிக்குள் ஏற்படும் மனக்கசப்பை மாற்றும். தெசாபுத்தி பலமறிந்து வழிபாடுகளை மேற்கொண்டால் சிறப்பான பலன்களைக் காணலாம்.குறிப்பாக வியாழன் தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வது குடும்ப ஒற்றுமைக்கு வித்திடும். (தொடரும்)

**சிவல்புரிசிங்காரம்**

# ஊழல் மோசடிகளால் 54 அரசாங்க நிறுவனங்கள் நட்டமடைந்துள்ளன

## ஸ்ரீலால் லக்திலக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஊழல் மோசடிகளால் அரசாங்க நிறுவனங்கள் நட்டமடைந்துள்ளதாக ஊழல் கண்காணிப்பு அமைப்பின் தலைவரும் மனித உரிமை சட்டத்தரணியுமான ஸ்ரீலால் லக்திலக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக 54 அரச நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்பதனை திறைசேரியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர விளக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாவலவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க நிறுவனங்கள் நட்டமடைந்துள்ளதாகவும் இந்த நட்டத்திற்கான பொறுப்பினை ஆளும் கட்சியினர் ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

துறைமுக அதிகார சபை, உரக் கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், நெற்சபை மற்றும் இலங்கை மின்சார சபை போன்ற பல முக்கிய நிறுவனங்கள் நட்டமடைந்துள்ளன.

2ஜி மற்றும் 3ஜி அலைக்கற்றை கொடுக்கல்-வாங்கல்கள் தொடர்பில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள அதே சர்ச்சை நிலைமையே இலங்கையிலும் காணப்படுகின்றது. அலைக்கற்றை விற்பனை நடவடிக்கைகளின் போது ஊழல் மோசடிகள் இடம் பெற்றுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ஸ்ரீ-4)

# இலங்கை தமிழ் இளைஞன் உயிரிழக்க காரணமான நபருக்கு 31 மாத கடூழியசிறை

## பிரித்தானிய நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் இளைஞன் ஒருவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்தமை தொடர்பான வழக்கில் இளைஞன் ஒருவருக்கு பிரித்தானியாவின் ஹரோ நீதிமன்றம் 31 மாத கடூழிய சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

இரு பிள்ளைகளின் தந்தையான இராஜேந்திரா இராமகிருஷ்ணன் (வயது-34)என்பவரே விபத்தில் உயிரிழந்தவராவார்.

இவரது மனைவி மற்றும் பிள்ளைகள் இலங்கையில் உள்ளனர்.இவர் பத்திரிகை விநியோகஸ்தராக வேலை செய்துள்ளார்.

கடந்த வருடம் ஜூலை 20 ஆம் திகதி காலை 6.20 மணி அளவில் கோர்ன்பெல் வீதி, அக்பிரிட்ஜ் வீதி ஆகியவற்றுக்கு அருகில் இராமகிருஷ்ணன் காயப்பட்டுக் கிடந்தார்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர் கழுத்துத் தண்டில் ஏற்பட்டிருந்த முறிவால் மூன்று நாட்களின் பின் உயிரிழந்துள்ளார்.

இவரை மோட்டார் சைக்கிள் விபத்தில் காயப்படுத்திக் கொன்றார் என்பதற்காக அலெக்சாண்டர் பிரெஸ்லாவ்ஸ்கி (22 வயது) என்ற இளைஞன் கைது செய்யப்பட்டார்.

ஆபத்தான முறையில் வாகனத்தை செலுத்தி மரணத்தை ஏற்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டி இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவர் மிக வேகமாக வாகனத்தை செலுத்தியதை வீதிக் கண்காணிப்புக் கமரா காட்டிக் கொடுத்தது.இளைஞனும் குற்றத்தை நீதிமன்றில் ஒப்புக் கொண்டிருந்தார்.(ஸ்ரீ-2)



நாவற்குழி மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்புவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாகாண உள்ளூராட்சி பிரதியமைச்சர் இந்திக பண்டார நாயக்க மற்றும் அதிபர் ஆகியோர் ஆய்வுகூடத்தைத் நாடாவைவெட்டி திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## வவுனியாவுக்கும் இரத்மலானைக்கும் இடையில் பயணிகள் விமானசேவை

(கொழும்பு)

வவுனியாவுக்கும் இரத்மலானைக்கும் இடையிலான பயணிகள் விமானசேவை இலங்கை விமானப் படையினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிலிருந்து கொழும்புக்கான போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்குடனும் விரைவான சேவையைக் கருத்திற் கொண்டும் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பயணி ஒருவரிடமிருந்து ஒரு வழிக் கட்டணமாக 6 ஆயிரத்து 600 ரூபா அறவிடப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வவுனியா விமானப்படைத்தளத்தில் பயணிகள் காத்திருப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அன்றாடம் பயணிகள் எண்ணிக்கைக்கேற்ப இச் சேவை விஸ்தரிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கே பலாலிக்கும் கொழும்பிற்கும் இடையிலான பயணிகள் விமானசேவை நடைபெற்றுவரும் நிலையில் இந்தச் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## இலங்கை கடற்பரப்பில் சஞ்சரித்த இந்திய மீன்பிடிப் படகு மீட்பு

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் சஞ்சரித்த இந்திய மீன்பிடிப் படகு ஒன்றை இலங்கை கடற்படையினர் நேற்று முன்தினம் மீட்டுள்ளதாக கடற்படை இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

தலைமன்னார் பகுதியில் இந்தப் படகு மீட்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இந்திய உயர்ஸ்தானிகரகத்தின்கோரிக்கைக்குஅமைய அந்தப் படகில் இருந்த மூன்று இந்திய மீனவர்களும் இந்திய சர்வதேச கடற் பரப்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு இந்திய கடற்பாதுகாப்புதரப்பிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)

## சில சர்வதேச அமைப்புக்கள் புலிகளின் மனோநிலையை பிரதிபலிக்கின்றன

### அமைச்சர் டியூ குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

சில சர்வதேச அமைப்புக்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் மனோநிலையை பிரதிபலிப்பதாக சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கையில் மெய்யான சமாதானம் நிலைநாட்டப்படவில்லை என அண்மையில் சர்வதேச அனர்த்தக்குழு வெளியிட்டிருந்த அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப் பாடுகளையே இந்த அமைப்புக்கள் பிரதிபலிக்க முயற்சிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உண்மை நிலைமைகளைக் கருத்திற் கொள்ளாது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்- யுவதிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ் மக்கள் திருப்தியடைந்துள்ளனர்.

வடக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்படுவதன் மூலம் ஜனநாயக உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை மேலும் நிரூபணமாவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-4)

## சின்ன மடுமாதா யாத்திரைத்தல திருவிழா

(யாழ்ப்பாணம்)

சின்னமடுமாதா யாத்திரைத்தல திருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம்திகதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு முதல் திருப்பலியும் காலை 8 மணிக்கு திருநாள் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

அத்தோடு ஆலயத்திற்கு செல்வதற்கான பயணிகள் பேருந்து சேவைகள், தங்குமிட வசதிகள் என்பனவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அருட்பணி யே. அ. அருள்தாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## 2011.07 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1499-புனித ரோமப் பேரரசின் முதலாம் மாக்சிமிலியனின் படைகளை சுவிஸ் படைகள் டொனார்க் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் வென்றன.

★ 1587-வட கரோலினாவின் ரோனோக் தீவில் ஆங்கிலேயர்களின் இரண்டாவது தொகுதி குடியேற்றவாதிகள் வந்திறங்கினர்.

★ 1812-வெல்லிங்டன் பிரபு தலைமையிலான பிரித்தானியப் படைகள் ஸ்பெயினில் சலமாங்கா என்ற இடத்தில் பிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்தன.

★ 1823-யாழ்ப்பாணத்தில் டாக்டர் டானியல்வோரன்புவர் தலைமையில் அமெரிக்கமிஷனின் பட்டிக் கோட்டா செமினறி திறக்கப்பட்டது.

★ 1916-கலிபோர்னியா, சான் பிரான்சிஸ்கோவில் ஊர்வலமொன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1933-வைலி போஸ்ட் 15,596 மைல்களை 7 நாட்கள், 18 மணி, 45 நிமிடங்களில் உலகைக் கடந்து தனியே உலகைச் சுற்றி வந்த முதல் மனிதன் என்ற பெருமையைப் பெற்றார்.

★ 1944-போலந்தின் தேசிய விடுதலைக்கான குழு நாட்டில் சீர்திருத்தங்களையும் நாசிகளுக்கெதிரான போரை முன்னெடுத்துச் செல்லவும் தொழிற்சாலைகளை தேசியமயமாக்கும் திட்டத்தையும் அறிவித்தது. போலந்தில் கம்யூனிச ஆட்சி ஆரம்பமானது.

★ 1942-நாசாவின் மரைனர் 1 விண்கலம் ஏவப்பட்டு சில நிமிடங்களில் கட்டுக் கடங்காமல் சென்றதால் அது அழிக்கப்பட்டது.

★ 1999-விண்டோஸ் லைவ் மெசன்ஜர் மைக்ரோசொப்டினால் வெளியிடப்பட்டது.

★ 2003-ஈராக்கில் சதாம் உசேய்னின் புதல்வர்கள் குவாசி, உதய் இருவரும் அமெரிக்க இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். இவர்களுடன் சதாமின் 14 வயதுப் பேரனும் கொல்லப்பட்டான்.

★ 2009-சூரிய கிரகணம்,ஜூலை 22 21 ஆம் நூற்றாண்டின் மிக நீண்ட சூரிய கிரகணம் நிகழ்ந்தது. வட இந்தியா, நேபாளம், வங்களாதேசம் போன்ற இடங்களில் முழு கிரகணம் ஏற்பட்டது.

### பிறப்புக்கள்


★ 1923-முகேஷ், இந்தியப் பாடகர் (இ.1976)

★ 1983-நுவன் குலசேகர, இலங்கைத் துடுப்பாட்ட வீரர்

### இறப்பு

★ 1832-இரண்டாம் நெப்போலியன், பிரான்சின் பேரரசன் (பி.1811)

# மரணம் - அப்புறம்?



## ஆன்மீகம் 04

கேள்வியாளர்: பிறப்பு- இறப்பு சுழற்சியிலிருந்து ஆண்கள் விலகிக் கொள்ளவேண்டும் என்று நாங்கள் கேள்விப்பட்டோம். அதைப்பற்றி நீங்கள் சிறிது விளக்கமுடியுமா? (பதில் தொடர் கீழே)

சத்குரு: ..."பிராரப்தா" பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பிராரப்தா என்பது ஒரு ஆயுட்காலத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட கர்மா ஏனெனில் நீங்கள் சேர்த்து வைத்திருக்கும் அனைத்துக் கர்மாக்களையும் ஒரு ஆயுட் காலத்துக்கே ஒதுக்கி விட்டால் உங்களால் தாங்க முடியாது. உங்களால் வாழ முடியாது உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கர்மா குடோன் இருக்கிறது. அதை "சஞ்சிதா" என்று குறிப்பிடுகிறோம். அந்த கர்மா குடோனிலிருந்து இந்த ஆயுளுக்காக மட்டும் என்று குறிப்பிட்ட அளவு கர்மா ஒதுக்கப்படுகிறது. ஏனெனில் குடோனிலுள்ள அவ்வளவு கர்மாவையும் உங்களால் கையாள முடியாது. எனவே இந்த ஆயுளில் கையாள்வதற்கென்று குறிப்பிட்ட அளவு கர்மா ஒதுக்கப்படுகிறது. ஆனால் பொதுவாக, ஒரு பிறவிக்கென ஒதுக்கப்பட்ட கர்மாவை கழிப்பதை விடவும் அந்தப் பிறவியில் புதிதாக சேர்த்துக் கொள்வது அதிகமாக இருக்கிறது. இப்படிக் கர்மா சேர்ந்து, சேர்ந்து, சோந்து கொண்டே போகிறது. இதன் காரணமாக உயிர்ச் சக்தியில் ஒரு வித அதிர்வு இருக்கிறது. அந்த அதிர்வு தளர்ந்து போகா விட்டால் அந்த உயிருக்கு அடுத்த உடம்பு கிடையாது. நீங்கள் இந்த உடலை விடவேண்டுமானால் உங்கள் உயிர்ச் சக்தி தளர்வடைய வேண்டும். இன்னொரு உடலைப் பெறவேண்டுமானால் உங்கள் உயிர்ச்சக்தி தளர்வடைய வேண்டும். இதைத்தான் நாம் சமாதிநிலையெனக் குறிப்பிடுகிறோம். இந்த நிலைில் நீங்கள் விழிப்புணர்வுடன் உயிர்ச்சக்தியின் தீவிரத்தைக் குறைத்துக் கொள்கிறீர்கள். உங்கள் உயிர்ச்சக்தி மிகவும் தளர்வடைந்து போகும்போது, விரும்பினால் நீங்கள் இந்த உடலை விட்டுப் போய்விட முடியும். மேலும் இன்னொரு உடலில் நுழைய முடியும்

இப்படியே இந்த வாழ்க்கை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இது ஏதோ ஒரு தண்டனை போலவோ அல்லது பரிசுபோலவோ கிடையாது. இயற்கையின் சுழற்சி அப்படித்தான் இருக்கிறது. உங்களுக்குள் ஒரு குறிப்பிட்ட வழிப்புணர்வு எழுவதன் காரணம், நீங்கள் எதையோ படித்ததால் அல்ல பிறப்பு, இறப்பு சுழற்சியின் அர்த்தமற்ற தன்மையை நீங்கள் உணர்ந்து கொண்டதால்தான். பிறப்பு, இறப்பு சுழற்சியின் அர்த்தமற்ற தன்மையை உணர்ந்து கொள்ளும் போதுதான் நீங்கள் முக்தி பற்றி பேச ஆரம்பிக்கிறீர்கள். முக்தியென்றால் பிறப்பு, இறப்பு சுழற்சியிலிருந்து விடுபட விரும்புவது. துன்பப்படுவதால் இந்த விருப்பம் வரவில்லை. பிறப்பு- இறப்பிலிருந்தே விடுபட நினைக்கிறீர்கள். துன்பத்திலிருக்கும் மக்கள் முக்தியை அடைய முடியாது. நீங்கள் நலமாகத்தான் இருக்கிறீர்கள்; அனந்தமாகத்தான் இருக்கிறீர் கள். ஆனால், ஆரம்பப்பள்ளியை விட்டுத் தாண்டிப் போக நினைக்கிறீர்கள். ஆரம்பப் பள்ளி வாழ்க்கை ஏ்வ்வளவுதான் அழகாக இருந்தாலும் நீங்கள் கல்லூ ரிக்குப்போக விரும்புவீர்களா, மாட் டீர்களா? ஆரம்பப்பள்ளியை அனுப வித்துவிட்டோம். இப்பேது நீங்கள் அதிலிருந்து நகர விரும்புகிறீர்கள். "நான்" என்று நீங்கள் அழைத் துக்கொள்கிற இந்த உயிரை- நான் எப்போதும் எதிர்மறைச் சொல்லால்தான் அழைக்கிறேன்; அப்போதுதான் உங்கள் கற்பனை கொடிகட்டிப் பறக்காது- வெற்றிடம் அல்லது இருட்டு என அழைப்போம், அதை விடுத்து நான் ஒளி என்றோ அல்லது கடவுள் என்றோசொன்னால் நீங்கள் கற்பனையில் மிதக்கக்கூடும்.

உங்களுக்குள் உள்ள வெற்றிடம் ஒரு காற்றுக் குமிழ்போல இருக்கிறது. கர்மா அந்தக் காற்றுக் குமிழியின் சுவராக இருக்கிறது. கர்மா இல்லாமல் உங்கள் இருப்பே இங்கு இருக்கமுடியாது. கர்மா உங்கள் எதிரியல்ல. கர்மா இருப்பதால்தான் நீங்கள் உடலுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் கர்மாவும் நீக்கப்பட்டு விட்டால், நீங்கள் உடலுடன் ஒட்டிக் கொண்டிருக்க முடியாது. அது ஒரு காற்றுக் குமிழ் நீங்கள் உங்கள் உடலைவிட்டு நீங்கினாலும் இந்தக் காற்றுக்குமிழ் இருக்கிறது. அது தன் அதிர்வை இழந்தவுடன் இயற்கையாகவே அது வேறு உடலை எடுத்துக் கொள்ளும். எனவே இப்போது அந்தக்காற்றுக் குமிழியை துளையிட விரும்புகிறோம். முக்தியென்பது எதைக் குறிக்கிறது என்றால், உங்களுக்குள் உள்ள குமிழியில் துளையிடுவதன் மூலம், அதிலுள்ள காற்று வெளிவந்து எல்லாவற்றின் பகுதியாக மாற விரும்புவதைத்தான் குறிக்கிறது.

ஞானோதயம் என்பதும் இதைத்தான் குறிக்கிறது. பெரும் பாலானோருக்கு ஞானோதயம் அடையும் நேரமும் உடலை விட்டுச் செல்லும் நேரமும் ஒன்றாக இருக்கிறது. உடலின் அடிப்படை செயற்தன்மையை அறிந்த சிலர் மட்டும் உடலின் தந்திரங்கள் அறிந்த சிலர் மட்டும், ஒரு குறிப்பிட்டகாலத்திற்கு உடலைத்தக்கவைத்துக் கொண்டிகிறார்கள். ஞானோதயம் அடையும் நேரமும் உடலை விட்டுச்செல்லும் நேரமும் ஒன்றாக இருக்கிறது. உயிர்ச்சக்தி அதிக தீவிரத்துடன் இருந்தாலும் நீங்கள் உடலைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# ஈழத்துச் சஞ்சிகைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

## "ஞானம்" சஞ்சிகையினூடக ஓர் அனுபவப் பகிர்வு

**03**

1966 இல் மல்லிகைவெளிவரத் தொடங்கியது. "மனைவியினுடைய காப்பை முன்னர் அடைவு வைத்திருந்தேன் அதை மீட்டு விற்றேன். 360 ரூபா கிடைத்தது. தோழர் அரியரத்தினம் 40 ரூபா அன்பளிப்புச் செய்தார். பூபாலசிங்கம் 25 ருபா தந்துதவினார். துணிச்சலுடன் செயற்பட்டேன் முதல் இதழை வெளிக் கொணர்ந்தேன்" என்றார் அதன் ஆசிரியர் டொமினிக் ஜீவா.

முற்போக்கு வாதமும் அணிசேர் ஆதரவும் உச்சத்திலிருந்த ஒரு கால கட்டத்தில் முற்போக்கு அணியினருக்காகவே ஆரம்பிக்கப்பட்டது மல்லிகை...

இந்த இடத்தில் வல்லிக்கண்ணனின் பின்வரும் கூற்று இங்கு நினைவு கொள்ளத்தக்கது. "இப்போது சிறு பத்திரிகை என்றால், குறித்த ஒருகொள்கைக்காக அல்லது நோக்கத்திற்காக ஏறக்குறைய ஒத்த மனோபாவம் கொண்ட மிகச்சிலரை வாசகர்களாகக் கொண்டு, வெகு குறைவான பிரதிகளே அச்சிடப்பட்டு (200அல்லது300) சந்தாதாரர்களை மட்டும் (For Private Circulation Only)என்ற நோக்கில் வெளிவருவது என்று பொருள் கொள்ளப்படுவது இயல்பாகி விட்டது."

ஆனால் "முற்போக்கு அணியினருக்கென்றே ஆரம்பிக்கப்பட்ட மல்லிகை, அந்த அடிமைத்த தன்மையிலிருந்து தன்னை மெது மெதுவாக விலக்கிக்கொண்டது. ஜீவா என்பவரின் இந்த அணிசேரா மனப் பக்குவம் மல்லிகையின் வெற்றிக்கான இன்னொரு காரணம்." எனக்குறிப்பிடுகிறார் மூத்த எழுத்தாளரான தெளிவத்தை ஜோசப்.

அடுத்ததாக ஈழத்துச் சஞ்சிகைகளின் விற்பனைச் சந்தை மிகச் சிறியதாக இருப்பதும் சஞ்சிகைகளின் விநியோகத்தைப் பாதிக்கும் ஒரு காரணியாக இருக்கிறது.

சிலர் தமிழ்நாட்டு சிறு சஞ்சிகைகளோடு ஈழத்துச் சிறு சஞ்சிகைகளை ஒப்பிட்டுப் பேசுவர். இது தவறான ஒப்பீடு ஆகும். தமிழ் நாட்டின் சனத்தொகை ஆறுகோடியாகும் ஆனால் எமது நாட்டின் தமிழ் பேசும் மக்களின் சனத்தொகை 20 இலட்சம் மட்டுமே அதாவது தமிழ் நாட்டில் 60 ஆயிரம்பேருக்கு ஒருவர் ஒரு குறிப்பிட்ட சஞ்சிகையின் பிரதியொன்றை வாங்கினாலும் அச்சஞ்சிகையின் ஆயிரம் பிரதிகள் இலகுவாக விற்பனையாகிவிடும். இந்த விகிதாசாரத்தில்பார்த்தால் எமது நாட்டில் 60 ஆயிரம் பேருக்கு ஒருவர் சஞ்சிகை வாங்கினால் 35 பிரதிகள் மட்டுமே விற்பனையாகும். இதே போன்று சஞ்சிகைக்கு வேண்டிய ஆக்கங்களைப் பெறுவதிலும் இந்த சன விகிதாசாரம் தமிழ் நாட்டில் சிறு சஞ்சிகை வெளியீட்டுக்குச் சாதகமான காரணியாக தொழிற்படுகிறது.

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளை எமது நாட்டில் இறக்குமதி செய்வதற்கு இங்கு தடையேதும் இல்லை. ஆனால், எமது நாட்டுச் சஞ்சிகைகள் தமிழ் நாட்டுக்குச் செல்வதை இந்திய அரசாங்கம் தடை செய்துள்ளது. இதன் காரணமாகத் தமிழ் நாட்டின் தரக் குறைவான ஜனரஞ்சக சஞ்சிகைகள் எமது நாட்டின் விற்பனைச் சந்தையை ஆக்கிரமிக்கின்றன. விற்பனை முகவர்களுக்கு இந்தசஞ்சிகைகளினால் அதிக ஆதாயம் கிடைப்பதால் அவர்கள் ஈழத்துச் சஞ்சிகைகளின் விற்பனையில் அதிகம் அக்கறை காட்டுவதில்லை.

தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளோடு ஒப்பிடுகையில் நமது நாட்டு சஞ்சிகைகளின் உற்பத்திச் செலவும் அதகமாகவுள்ளது. எமது நாட்டில் அச்சடிக்கும் தாள்களுக்கு இறக்குமதியின்போது அதிகளவு வரி அறவிடப்படுகிறது. இந்திய நாட்டில் தாள் உற்பத்தி அதிகளவில் இருப்பதால் அங்கு மலிவான விலையில் தாள் கிடைக்கின்றது. இதே போன்று மனிதவளம் உட்பட அச்சுத் தொழிலுக்கு வேண்டிய சகல பொருட்களும் அங்கு மலிவாகக் கிடைக்கின்றன. இதன் காரணமாக ஒப்பீட்டளவில் குறைந்த விற்பனை விலையை தமிழகச் சஞ்சிகைகளால் குறிக்க முடிகிறது. இதனால் இடைத்தரகர்களான விற்பனை முகவர்கள் அதிக இலாபத்தை பெறுகின்றனர். இதன் கரணமாக உற்பத்தி அதிகரிப்பதற்கான ஒரு மறைமுகமான பொறி முறை இயக்கம் பெறுகிறது.

விநியோகத்தைப்பொறுத்த வரையிலும் ஈழத்துச் சிறுசஞ்சிகைகள் பாரிய பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றன. ஈழத்துச்சிறு சஞ்சிகைகளின் விநியோகத்தைப் பொறுப்பேற்க எந்தப்பிரதான முகவர்களும் முன்வருவதில்லை. இதற்கு முக்கியகாரணம் இந்தியச் சஞ்சிகைகளோடு ஒப்பிடுகையில் ஈழத்துச்சஞ்சிகை விற்பனையால் கிடைக்கும் இலாபம் மிகக்குறைவானதே.

(தொடரும்)

**தி.ஞானசேகரன்**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# விவசாயத்துறையின் முன்னேற்றத்துக்கு பெரும் சவாலாக அமையும் களைகள்

இன்று விவசாயத்துறையில் பல்வேறு முன்னேற்றங்கள் காணப்பட்டாலும் களைகள் பெரும் சவாலாக அமைகிறது. இக்களைகளின் விளைவால் உற்பத்தி துறையில் பெருமளவு நஷ்டத்தை உண்டு பண்ணுகிறது.


களைகள் என்பதற்கு உறுதியான எந்தவொரு வரைவிலக்கணமும் வரையறுக்கப்படவில்லை. பொதுவாக களைகள் என்பது வேண்டப்பட்ட நிலத்தில் வாழும் தேவையற்ற தாவரங்களாகும். ஆனாலும் ஒரு தாவரம் அது வளருமிடத்தைப் பொறுத்து அது வேண்டத்தக்கதாகவோ அல்லது முக்கியத்துவமற்றதாகவோ அமைந்து விடுகின்றது. உதாரணமாக அறுகம்புல் (cynadon dactylon). இது பயிர்களிடையே காணப்படும் போது பிரச்சினைக்குரியதாக இருப்பினும் இவை கால்நடை தீவனமாகவும் மருத்துவத்தேவைக்கு பயன்படுத்தக்கூடியதாகவும் உள்ளன.

***களைகளால் ஏற்படும் பிரச்சினைகள்***

களைகள் விளைச்சலில் அதிக இழப்புகளை ஏற்படுத்துவதுடன் பயிர்களின் உற்பத்திச் செலவை அதிகரிக்கச் செய்கிறது. பயிராக்கச் செயற்பாடுகள் உதாரணமாக விதைத்தல், நாட்டல், உரமிடல், அறுவடை செய்தல் போன்றவற்றை இலகுவில் மேற்கொள்ள முடியாதிருப்பதுடன் பயிர்ச்செய்கைச் செலவையும் அதிகரிக்கச் செய்கிறது. நீர்ப்பாசனவாய்க்காலில் செறிந்து காணப்படுவதால் நீர்ப்பாய்ச்சல் தடைப்படுகின்றன. அத்துடன் அறுவடை செய்த விளை பொருட்களுடன் களையோ அல்லது அதன் விதையோ பெருமளவில் காணப்படின் அவை தகுந்த சந்தைமானத்தை இழந்து விடுகின்றன. சில களை விதைகள் உணவுப் பொருட்களுடன் கலக்கும் போது விரும்பத்தகாத மணம், சுவையை ஏற்படுத்துகின்றன.

பயிர்ச்செய்கை முடிந்த பின்னர் அவ்விடங்களில் வளரும் களைகள் பயிர் நோய்களுக்கும் பீடைகளுக்கும் இடைக்கால விருந்து வழங்கிகளாக காணப்படுகின்றன.

cynadon dactylon




களையும் பயிரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்ததாக இருக்கும் போது இச்செயற்பாடு மிகத் தீவிரமடைகிறது. சில களைகள் மனிதருக்கும் வளர்ப்புப்பிராணிகளுக்கும் ஊறுவிளைவிப்பவையாகவுள்ளன. உதாரணமாக பாதீனியத்தின் இலை, மகரந்தம் மனிதர்களில் ஒவ்வாமை நோய்களையும் ஆகாயத்தாமரை, சல்வீனியா நுளம்புகளின் வாழ்விடமாக இருப்பதால் மலேரியா, மூளைக்காய்ச்சல், டெங்கு நோயையும் ஏற்படுத்துகின்றன. கால்நடைகள் உட்கொள்ளும் சில களைகள் (உதாரணமாக பூமத்தை-Datura stramonium) உடற்கோளாறுகளையும் மணத்தையும் ஏற்படுத்துகின்றன.

***களைகளால் ஏற்படும் நன்மைகள்***

களைகள் பயிருக்கு பெரும் பிரச்சினையை தோற்றுவித்தலும் இவை இயற்கையின் சமநிலையில் முக்கியத்துவம் பெறுவதுடன் மனிதருக்கு பெரும் வழியில் உதவி புரிகின்றன. தரையின் போர்வையாக இருந்து இயற்கை சூழலின் ஒரு பிரதானமாக அங்கம் வகிக்கின்றன. பல்வேறு கீரைவகை, பழங்கள், வித்துக்கள், சத்துள்ளவையாகவும் பாதுகாப்பான உணவுகளாகவுள்ளன.

பல களைகள் மூலிகைகளாக உள்ளதால் உள்நாட்டு ஆயுள்வேதம், மேல்நாட்டு வைத்தியத்துறைகளிலும் மருந்துக்கான மூலப் பொருட்களாகவுள்ளன. பல்வேறு களைகள் தா்வர பீடை கொல்லிகளாக (Botanical pesticides) பயன்படுகின்றன. எருக்கு, சணல், காவுளாய் போன்றவை சிறந்த பசுந்தாட் பசளையாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இன்று வெவ்வேறு தொழில்நுட்ப முறையில் களைகளை கட்டுப்படுத்தினாலும் அதனை முழுமையாக கட்டுப்படுத்த முடிவதில்லை. அதற்கான காரணங்களாவன, களைகள் மிக வேகமாக பயிர்களுடன் போட்டியிட்டு வளர்கின்றன. இவை பயிரிடப்படும் தாவரங்களை விட பன்மடங்கு விதைகளை உற்பத்தியாக்குகின்றன. அத்துடன் விதைகள் நீண்ட கால முளைதிறனை கொண்டிருப்பதுடன் உறங்கு நிலையை (seed dormancy) கொண்டிருப்பதால் உகந்த சூழ்நிலை வரும் வரை காத்திருக்கின்றன.

சில களைவகைகள் வேர்த்தண்டுக்கிழங்கு, உறிஞ்சி, குமிழ் முதலான நிலக்கீழ்த் தண்டின் மூலம் இனம் பெருக்கக்கூடியவை. இதனால் நிலத்தின் மேற்பகுதி அழிக்கப்பட்டாலும் தப்பிப் பிழைத்து பொருத்தமான காலநிலையில் முளைத்து வாழும் ஆற்றல் கொண்டவை. களைகளில் சிறந்த பரந்த நாருருவான வேர்த் தொகுதி காணப்படுகின்றன.

பெரும்பாலான களைகள் $C_4$ ஒளித்தொகுப்பு வகையைச் சார்ந்தன. இதனால் ஒளித்தொகுப்புத் திறன் கொண்டவையாக இருப்பதுடன் பயிர்களின் ஒளித்தேவையுடன் போட்டி போடுகின்றன.

***களைகளின் வகைப்படுத்தல்***

களைகள் அவற்றின் வாழுங் காலம், வித்திலை வேறுபாடு, வாழிட வேறுபாடு, உருவவியல் வேறுபாடு அம்சங்களை வைத்து பொதுவாக வகைப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறான வைக்கப்படுத்தலானது களைகளை கட்டுப்படுத்தும் முறையினை மேற்கொள்ள இலகுவாகின்றது. ஒடுங்கிய இலைக்களைகள், புற்கள் அகன்ற இலைக் களைகள், ஒட்டுண்ணிக்களைகள் என பலவகைகளில் பாகுபடுத்தப்படுகின்றன.

உலகின் மிக. மோசமான களைகளை பல்வேறு ஆய்வாளர்கள் வகைப்படுத்துகின்றனர். ஹோம் (Holmet.al.1977) என்பவரும் அவரது ஆய்வாளர்களும் 12 களைகளை உலகில் மிக மோசமானவையாக பட்டியலிட்டுவிட்டுள்ளன. இதில் Cyperus rotandus முதலிடத்திலும் அறுகு (Cynadon dactylon) அடுத்த நிலையிலும் உள்ளன.

இன்று எமது யாழ்ப்பாணத்தில் ஏனைய களைகளுடன் ஒப்பிடுகையில், பொருளாதாரத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்துவதுடன் மனிதர்களுக்கு உயிராபத்தை வளைவிக்கின்றன. அவைகளில் பாதீனியம் (parthenium hysterophorus), ஆகாயத்தாமரை (Pistia sp) மிக முக்கியமான பாதிப்பை ஏற்படுத்தும் களைகளாக உள்ளன. இந்த இரு களைகளும் எமது பிரதேசத்துக்குரியவை அல்ல. அவை வேற்று நாடுகளிலிருந்து எமது பிரதேசங்களுக்கு கொண்டு வரப்பட்ட அல்லது புகுத்தப்பட்ட களைகளாகும்.

பாதீனியம் இந்திய இராணுவத்தின் வருகையோடு அவர்கள் உணவுக்காக கொண்டு வந்த செம்மறியாட்டின் மூலம் இக்களைகள் பரப்பப்பட்டுள்ளன. இக்களை ஒரு பருவத்துக்குரிய அகன்ற இலைக்களையாகும். இதனுடைய இலை செவ்வந்தியின் இலைகளை ஒத்தது.

தண்டு, இலைகளில் நச்சுச் சுணை மயிர்களை கொண்டது. வெண்ணிறமான



Datura stramonium

பூந்துணர்களை கொண்டது. வேறுபட்ட சூழலிலும் இவை வளரக்கூடிய இசைவாகக்கத்தை கொண்டுள்ளன.

ஒரு தாவரம் கிட்டத்தட்ட 5,000-10,000 வரையிலான வித்துக்களை உருவாக்குகின்றன. ஆனால் மிக விரைவாகப் பெருகும் ஆற்றலுடையது.

அங்குரத் தொகுதி வெட்டப்பட்டாலும் இலகுவில் துளிர்த்துவிடும். இதன் வாழ்க்கைக்காலம் 6-8 மாதங்களாக இருப்பினும் கட்டுப்படுத்தாவிடில் பல்லாண்டு களையாக வளரும்.

இதன் வித்து 2-3 ஆண்டுகள் வரை முளைக்கும் தன்மை கொண்டவை. நீரினாலும் விலங்குகளாலும் பயன்படுத்தும் உபகரணங்களாலும் இடத்துக்கிடம் விரைவாக பரப்பப்படுகின்றன. இக்களையின் பெரும்பாலான பகுதிகள் Allelopathy விளைவை கொண்டுள்ளன. பாதீனியம் 'பாதெனின்' (parthenin) எனும் நச்சுப் பொருளை கொண்டிருப்பதால் இக்களை சருமத்தில் பட்டால் எரிவும் சரும நோயும் (Dermatitis) ஏற்படுகிறது. அத்துடன் இந்த நச்சுப் பொருள் தாவரங்களின் வித்துக்களை அடையும் போது அவற்றின் முளை திறனையும் வளர்ச்சியையும் குறைக்கிறது. பயிர்களின் மகரந்தச் சேர்க்கை மற்றும் கருக்கட்டலிலும் பாதிப்பை உண்டு பண்ணுகின்றன.

வறட்சியான உணவுத் தட்டுப்பாடான காலங்களில் ஆடுகள், மாடுகள் உட்கொள்வதால் அவற்றின் உடலில் உபாதைகள், இறப்பு ஏற்பட்டுள்ளன.

**செல்வி.ஆர்.கவிதா**
செய்முறை காட்டுநர்,
தாவரவியற்றுறை.

(தொடரும்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 45

**கட்புல ஒளியின் ஒரு கட்டை ( quantum) எவ்வாறு அழைப்பர்?**

**விடைகளை 01.08.2011 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Mr.S.Ketheeswaren
Editor, Section A
Jaffna Science Association
Library
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**
இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 44 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**தேனுகா மகேந்திரன்,
இல.58, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.**

**புதிர் 44 இற்கான கேள்வியும் விடையும்:**

RNA இன் மூன்று வகைகள் யாவை?
m-RNA,t-RNA,r-RNA

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல . 45**

சரியான விடை :..........................................
முழுப்பெயர் :..........................................
முகவரி :..........................................
:..........................................
தொ.பே. இல :..........................................
கையொப்பம் :..........................................

25. கிராமமொன்றில் பெரும்பாலும் காணக்கூடிவற்றை உள்ளடக்கிய விடை எது?
1. பாடசாலைகள், வீடுகள், புகையிரத நிலையம், மரங்கள்
2. மரங்கள், வீடுகள், ஒற்றையடிப் பாதைகள், புதிய பழங்கள்
3. தொடர்மாடிகள், பெருந்தெருக்கள், வாகனங்கள், மரக்கறிக் கடைகள்


**☛ 26ம், 27ம் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியத்தில் ஒரு சொல் பிழைப்பதனால் அதன் கருத்து பிழையாகின்றது. அச் சொல்லுக்குப் பதிலாக எழுதக்கூடிய சொற்களைத் தெரிவுசெய்க.**

26. புனித வெள்ளை உடை தரித்து வயோதிப மாதுக்கள் சிலர் பூக்கூடைகளுடன் பாடசாலைக்குச் சென்றனர்.
1. பள்ளிவாசலுக்கு 2. மரணவீட்டுக்கு 3. விகாரைக்கு

27. வாகன விபத்தில் சிக்குண்டு பலத்த மகிழ்ச்சிக்கு ஆளாகியவர்களை விரைவாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு பிரதேசவாசிகள் செயற்பட்டனர்.
1. அதிர்ச்சி 2. காயங்களுக்கு 3. துன்பத்துக்கு

28. நாளொன்றின் பொழுதுகளை கீழுள்ள படங்கள் காட்டுகின்றன. அவை ஒழுங்குமுறையாக அமைய வேண்டிய இலக்கங்களைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.


1. 2. 3. 4.



1. 3,1,2,4 2. 3,4,1,2 3. 3,1,4,2

**☛ 29ம், 30ம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருவின் கோலத்துக்கு அமைய வெற்றிடத்துக்கு வரவேண்டிய உருவைத் தெரிவுசெய்க.**

29.




1.

| | | |
|---|---|---|
| C | B | A |
| C | A | B |


2.

| | | |
|---|---|---|
| C | A | B |
| A | C | B |

3.

| | | |
|---|---|---|
| A | C | B |
| A | B | C |

30.




1.

| | | |
|---|---|---|
| N | K | M |
| K | N | K |


2.

| | | |
|---|---|---|
| M | K | N |
| K | L | K |

3.

| | | |
|---|---|---|
| L | K | N |
| K | M | K |

**31 - 40 வரையிலான வினாக்களுக்கு வரவேண்டிய விடைகளை அருகிலுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**




31. வட்டத்துக்கு மட்டும் உரிய எழுத்துக்கள் எவை?
..............................

32. வட்டத்துக்கும் செவ்வகத்துக்கும் மட்டுமே உரிய எழுத்து எது?
..............................

33. முக்கோணத்துக்கு உரித்தான ஆனால் சதுரத்துக்கு உரித்தில்லாத எழுத்துக்கள் எவை?
..............................

34. மூன்று உருக்களுக்கும் பொருத்தமான எழுத்து எது?
..............................

**35ம், 36ம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள சொற்களின் ஒலிக் குறிப்பிற்கேற்ப வரக்கூடிய கருத்துள்ள சொல்லொன்றை எழுதுக.**


35. அருவி ⟶ குருவி ⟶ உருவி ⟶ மருவி ⟶ ......................

36. வானம் ⟶ கானம் ⟶ பானம் ⟶ தானம் ⟶ ......................

37. முதலிருசோடிச் சொற்களும் அமைந்துள்ள விதத்தைப் புரிந்துகொண்டு வெற்றிடத்துக்கு வரவேண்டிய சொல்லை எழுதுக.


குலவி ⟶ விலகு, திருகு ⟶ குருதி, விருது ⟶ ......................

38.



மேலுள்ள குவியலில் எத்தனை செங்கற்கள் உள்ளன?


..........................



இவ்வுருவில் எத்தனை பேணிகள் உள்ளன?

..........................

40.



இவ்வுருவில் எத்தனை பூச்சாடிகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன?

..........................



# "வடக்கின் வசந்தம்"







மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் 2011 யூலை 18 – யூலை 20 வரையான மூன்று நாட்கள் வட மாகாணத்திற்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது "வடக்கின் வசந்தம்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்தி மற்றும் மீள்நிர்மாணத் திட்டங்களை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

ஜனாதிபதியின் இவ் விஜயத்தின் போது கௌரவ பிரதமர் டி.எம்.ஜெயரட்ண அவர்கள், கௌரவ அமைச்சர்கள், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாண ஆளுநர் கௌரவ ஜிஏ சந்திரசிறி மற்றும் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.





















அபிவிருத்தி மற்றும் மீள்நிர்மாணத் திட்டங்கள் :

- தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம் புதிய கட்டடம் திறப்பு
- பளை வைத்தியசாலைக் கட்டடத் தொகுதி அமைக்கும் திட்டம் ஆரம்பம்.
- கிளிநொச்சி நவீன சந்தைக் கட்டடத் தொகுதி அமைக்கும் திட்டம் ஆரம்பம்.
- பூநகரி பிராந்திய வைத்தியசாலை மீள்நிர்மாணப் பணிகள் ஆரம்பம்.
- கிளிநொச்சியில் சர்வதேச தர விளையாட்டரங்கு அமைக்கும் திட்டம் ஆரம்பம்.
- மீள்குடியமர்ந்த மக்களுக்கு பல்வேறு வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டன.
- யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் ஊவா–வடக்கு நட்புரிமை மண்டபம் என்கின்ற புதிய கட்டிடத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டது
- யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 34 பாடசாலைகளுக்கான பௌதீக வள மேம்பாடுகள் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களாலும் கௌரவ, பிரதமர் மற்றும் கௌரவ அமைச்சர்களாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட பாடசாலைகள் வருமாறு:

| | |
|---|---|
| யா/பெரியபுலம் ம.வி | யா/எழுவைதீவு முருகவேள் வி |
| யா/கரந்தன் இராமுப்பிள்ளை வி | யா/வேலணை சரஸ்வதி வி |
| யா/கொழும்புத்துறை ம.வி | யா/கரம்பன் சிறிய புஷ்ப கன்னியர்மடம் |
| யா/செங்குந்தா இந்துக் கல்லூரி | யா/அல்லைப்பிட்டி பராசக்தி வி |
| யா/அத்தியார் இந்துக் கல்லூரி | யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வி |
| யா/வதிரி திரு இருதயக் கல்லூரி | யா/அனலைதீவு சதாசிவ வி |
| யா/கைதடி முத்துக்குமாரசாமி வி | யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வி |
| யா/மீசாலை வீரசிங்கம் ம.வி | யா/ஏழாலை சிறிமுருகன் வி |
| யா/நல்லூர் ஸ்தான சிசிதகபா | யா/வல்வெட்டி இ.த.க.பா |
| யா/ஆவரங்கால் மகாஜனா வி | யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி |
| யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வி | யா/நெல்லியடி மெ.மி.த.க.பா |
| யா/உடுவில் முருகமூர்த்தி வி | யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி |
| யா/பிரான்பற்று கலைமகள் வி | யா/புங்குடுதீவு சிறிகணேசா வி |
| யா/கற்கோவளம் மெ.மி.த.க.பா | யா/பண்ணாகம் மெய்கண்டான் வி |
| யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி | யா/மானிப்பாய் மகளிர் கல்லூரரி |
| யா/மந்துவில் சிறிபாரதி வி | யா/கலாநிதி தியாகராஜா மவி |
| யா/நாவற்குழி ம.வி | யா/நயினாதீவு ம.வி |

(தி-3827)

## சிவன் கோவிலிலிருந்து இராணுவம் வாபஸ் பெற அவகாசம் தேவை

### தாய்லாந்து பிரதமர் கோரிக்கை

தாய்லாந்து, கம்போடியா எல்லையில் சிவன் கோவிலைச் சுற்றி நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரை வாபஸ் பெற போதிய அவகாசம் வேண்டும். புதிய அரசு பதவியேற்க வேண்டும் என்று தாய்லாந்து பிரதமர் அபிசிட் வெஜ்ஜாஜிவா கூறியுள்ளார்.

தாய்லாந்து, கம்போடியா எல்லையில் 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவன் கோவில் உள்ளது. இக்கோவில் உலக புராதனச் சின்னமாக கடந்த 2008 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. இதையடுத்து இக்கோவிலை தாய்லாந்து மற்றும் கம்போடியா நாடுகள் உரிமை கொண்டாடின.

இப்பிரச்சினை தொடர்பாக ஹேக்கில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தை கம்போடியா நாடியது.விசாரணை மேற்கொண்ட சர்வதேச நீதிமன்றம் இருநாட்டு எல்லைகளிலும் இருந்து இராணுவத்தை வாபஸ் பெற வேண்டும் என்று உத்தரவிட்டது.

இது குறித்து தாய்லாந்து பிரதமர் அபிசிட் வெஜ்ஜிஜிவா தலைநகர் பாங்கொங்கில் வழங்கிய பேட்டியில், இந்த உத்தரவு குறித்து புதிய அரசுக்கு பரிமாற்றம் செய்யவும் எங்களுக்கு போதிய கால அவகாசம் தேவை என்றார். (ஸ்ரீ-2)

# ஒக்டோபர் மாத இறுதியில் உலகின் சனத்தொகை 700 கோடியை எட்டும்

## நிபுணர்கள் மதிப்பீடு

(லண்டன்)

எதிர்வரும் ஒக்டோபர் மாத இறுதியில் உலகின் சனத்தொகை 700 கோடியை எட்டும் என நிபுணர்கள் மதிப்பீடு செய்துள்ளனர். கடந்த 1960 இல் உலக மக்கள் தொகை 300 கோடியாக இருந்தது.40 ஆண்டுகளில் அதாவது 1999 இல் இரட்டிப்பாகி 600 கோடியானது. இப்போது ஒவ்வொரு விநாடிக்கும் 5 குழந்தைகள் பிறக்கின்றன.

இதனால் மக்கள் தொகை ஆண்டுக்கு 7.8 கோடி அதிகரிக்கின்றது. இதன்படி பார்த்தால் வரும் ஒக்டோபர் மாத இறுதியில் 700 கோடியை எட்டும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேநிலை நீடித்தால் 2025 ஆம் ஆண்டில் மக்கள் தொகை 800 கோடியாகவும் 2050 ஆம் ஆண்டில் 900 கோடியாகவும் அதிகரிக்கும் என ஐ.நா.சபை தெரிவித்துள்ளது. குறிப்பாக உலகின் ஏழை நாடுகளில்தான் மக்கள் தொகை வேகமாக அதிகரித்து வருகிறது. ஏழை நாடுகளின் மக்கள் தொகை மட்டம் அடுத்த பத்தாண்டில் இரண்டு மடங்காக உயரும்.

மக்கள் தொகை வேகமாக அதிகரித்து வரும் நிலையில் அவர்களின் உணவு தேவையை எப்படி பூர்த்தி செய்யப் போகிறோம் என்பது கேள்விக்குறியாக உள்ளது. தொழிற்சாலை பெருக்கம் காரணமாக பூமி வெப்பமடைந்து வருகின்றது. இதனால் நீர் ஆதாரங்கள் மற்றும் மண் வளம் அழிந்து வருவதுடன் பனி மலைகள் உருகுகின்றன. மீன் வளம் குறைந்து வருகின்றது.

இதனால் உணவு உற்பத்தி குறைந்து 100 கோடி பேர் பட்டினியால் வாடும் நிலை உருவாகும் என ரொபர்ட் குன்சிங் என்பவர் கூறியுள்ளார்.

இப்போது 10 முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் எண்ணிக்கை 180 கோடியாக உள்ளது. இப்போது உள்ள சனத்தொகை எண்ணிக்கை அதிகரிக்காமல் இருக்க வேண்டுமானால் ஒவ்வொரு தம்பதியும் சராசரியாக 2.1 குழந்தைகளை மட்டுமே பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஏழை நாடுகளில் சனத்தொகை வேகமாக அதிகரித்து வரும் நிலையில் ஐரோப்பிய நாடுகள் மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளிலோ நிலைமை எதிர்மாறாக உள்ளது. இதனால் எதிர்வரும் காலத்தில் ஓய்வு பெறுவோரை ஈடுகட்டுவதற்கு போதுமான இளைஞர்கள் இருக்க மாட்டார்கள் என இத்துறை சார்ந்த நிபுணர்கள் கூறியுள்ளனர். (ஸ்ரீ-4)

## சோமாலியாவில் கடும் வரட்சி: ஒருகோடி மக்கள் பட்டினி

### உணவின்றி தினமும் அறுவர் உயிரிழப்பு

(நைரோபி)


ஆபிரிக்க நாடான சோமாலியாவில் கடந்த 1992 ஆம் ஆண்டு கடும் வரட்சி நிலவியது. அப்போது பல்லாயிரக்கணக்கானோர் பட்டினியால் உயிரிழந்துள்ளனர். ஐ.நா.சபை மேலை நாடுகளின் உதவியால் நிலைமை சீரடைந்தது.

இந்த நிலையில் இப்போது மீண்டும் கடும் வரட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் பல இடங்களில் மக்கள் உணவு கிடைக்காமல் பட்டினி கிடக்கின்றனர். ஒருகோடியே 13 இலட்சம் பேர் பட்டினி கிடப்பதாக ஐ.நா.சபை தகவல் தெரிவித்துள்ளது.

சோமாலியா நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு எதுவும் இல்லை. 1990 ஆம் ஆண்டு அங்கு அரசு கவிழ்ந்தது. அதன் பின் எந்த ஆட்சியும் இல்லை. நாட்டின் பெரும் பகுதியை முஸ்லிம் தீவிரவாத அமைப்புகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளன.

அவர்கள் வெளிநாட்டு உதவிகளை ஏற்க மறுக்கிறார்கள். அதை மீறி தொண்டு நிறுவனங்கள் உணவு போன்றவற்றை கொடுத்து உதவி செய்தால் தொண்டு நிறுவன ஊழியர்களை சுட்டுக் கொல்கிறார்கள்.

எனவே ஐ.நா.சபை உள்ளிட்ட எந்த தொண்டு நிறுவனங்களாலும் அவர்களுக்கு உணவு வழங்க முடியவில்லை. இதனால் வரட்சியால் பாதித்து மக்கள் பட்டினி கிடக்கிறார்கள். தினமும் 6 பேர் பட்டினியால் சாவை சந்திக்கின்றனர். அதில் அரைவாசிப் பேர் குழந்தைகளாக உள்ளனர்.



வரட்சி தாங்கமுடியாமல் பெரும்பாலான மக்கள் பக்கத்து நாடான எதியோப்பியா வுக்கு அகதிகளாக குடிபெயர்ந்து வருகின்றனர். கடந்த ஆண்டில் மட்டும் விலைவாசி 270 சதவீதம் உயர்ந்துள்ளது. அங்கு தொற்று நோயும் ஏற்பட்டுள்ளது. 90 சதவீத கால் நடைகள் வரட்சியால் உயிரிழந்துவிட்டன.

நிலைமை இப்படியே சென்றால் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழக்கக்கூடுமென நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். சோமாலியாவுக்கு உதவ உடனடியாக 2500 கோடி ரூபாய் தேவைப்படுகிறது.இதற்கு சர்வதேச நாடுகள் உதவ வேண்டும் என்றும் ஐ.நா.சபை கேட்டுக் கொண்டுள்ளது. (ஸ்ரீ-2)

## உஸ்பெஸ்கிஸ்தானில் பயங்கர நிலநடுக்கம்

### 13 பேர் பலி

(பெர்கானா)

ரஷ்யாவில் இருந்து பிரிந்து சென்ற நாடுகளில் ஒன்று உஸ்பெஸ்கிஸ்தான். இது ஆப்கானிஸ்தான் நாட்டை ஒட்டி உள்ளது. உஸ்பெஸ்கிஸ்தானில் உள்ள பெர்கான் நகரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று அதிகாலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் ஏராளமான வீடுகள் இடிந்து விழுந்தன. இவற்றில் சிக்கி 13 பேர் உயிரிழந்தனர். 86 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பெர்கான் நகரில் இடிபாடுகளுக்குள் ஏராளமானோர் சிக்கி இருக்கலாம் என்று கருதப்படுகிறது. அங்கு மீட்பு பணிகள் நடந்து வருகின்றன. எனவே பலியானோர் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

உஸ்பெஸ்கிஸ்தான் ஜனாதிபதி இஸ்லாம் கரிமோவ் இதுபற்றி கூறும் போது, நில நடுக்கத்தின் பாதிப்பு அதிகமாக இருக்கும் என்று கருதுகின்றோம். பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் அதிகாரிகள் குழுவை அனுப்பி உள்ளோம்.

அயல் நாடான கிர்கிஸ்தான் உதவியையும் நாடியுள்ளோம். இதுசக்தி வாய்ந்த நிலநடுக்கமாக உள்ளது. எனவே நிலைமை மோசமாக இருப்பதாகவே கருதுகின்றோம் என்றார்.

இதேபோல அயல் நாடான கிர்கிஸ் தான் நாட்டிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆனால் அங்கு பாதிப்புகள் எதுவும் ஏற்பட்ட தாக இதுவரை தகவல் இல்லை.

நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.1 ஆக இருந்தது. இதன் மைய பகுதி பூமிக்கு அடியில் 18 கிலோ மீற்றர் ஆழத்தில் இருந்தது. நிலநடுக்கம் 3 நிமிடம் நீடித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

2008 ஆம் ஆண்டு உஸ்பெஸ்கிஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான் நாட்டில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அப்போது 70 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)




## எகிப்தில் 3 கட்டங்களாக பாராளுமன்றத் தேர்தல்

(கெய்ரோ)

எகிப்து நாட்டில் மூன்று கட்டங்களாக பாராளுமன்ற தேர்தல் நடக்க இருப்பதாக அந்நாட்டு இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடான எகிப்தில் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கிற்கு எதிராக மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். 17 நாட்கள் நடந்த போராட்டத்திற்குப் பின்னர் கடந்த பெப்ரவரி மாதம் ஜனாதிபதி முபாரக் தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

தற்போது இடைக்கால அரசும் இராணுவமும் ஆட்சி செய்து வருகிறது. இந்நிலையில் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதி நடக்கலாம் எனத் தெரிகிறது.

இப்பாராளுமன்றத் தேர்தலை மூன்று கட்டங்களாக நடத்த இராணுவம் திட்டமிட்டுள்ளது.இதுகுறித்து இராணுவ தலைமை அதிகாரி ஜெனரல் மமாதுக் ஷாஹீன் கூறுகையில்,

நாடு முழுவதும் 120 மாவட்ட வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தேர்தலை இராணுவமே முன்னின்று நடத்தினாலும் நீதித்துறை தான் கண்காணிக்கிறது. இதற்காக சிறப்பு நீதிபதி ஒருவர் நியமிக்கப் படவுள்ளார் என்றார்.

மேலும் எகிப்தில் முக்கிய அரசியல் கட்சிக்கு நிகரான அமைப்பான முஸ்லிம் சகோதரத்துவம் என்ற அமைப்பும் இந்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுகிறது. அதே போன்று பதவிநீக்கம் செய்யப்பட்ட முபாரக்கின் தேசிய ஜனநாயக கட்சியும் போட்டியிடுகிறது. (ஸ்ரீ-4)

## மலாவி நாட்டில் ஜனாதிபதிக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி

மலாவி நாட்டில் ஜனாதிபதிக்கு எதிராக மக்கள் கிளர்ச்சியில் ஈடுட்டனர். இதனால் ஏற்பட்ட வன்முறையில் பலர் காயமடைந்தனர். ஆபிரிக்க நாடான மலாவி நாட்டின் ஜனாதிபதியாக பிங்கூ-வா-முத்தாரிகா உள்ளார். இவர் மக்களுரிமை சட்டத்தினை மீறி பொருளாதார சீர்திருத்தம் மேற்கொண்டதாக புகார் எழுந்தது.

இவரின் நடவடிக்கைக்கு பொதுமக்கள் கடும்எதிர்ப்புத் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வர்த்தக நகரான தலைநகர் லைனோகிவ் நகரில் ஒன்றுகூடி ஜனாதிபதியைப் பதவி விலகக்கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதனால் அப்பகுதியில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடம் விரைந்து நடவடிக்கை எடுத்தனர். பொது மக்களின் இந்தக் கிளர்ச்சியினால் அப்பகுதி போர்க்களம் போல் காட்சியளித்தது.

இதற்கிடையே மலாவி நாட்டின் வடக்குப் பகுதியான மிஸுசூ நகரில் உள்ள ஜனாதிபதியின் ஜனநாயக முற்போக்கு கட்சியின் அலுவலகத்தினை பொதுமக்கள் சூறையாடினர்.



அங்கும் பதற்றம் நிலவிவருகிறது. இது குறித்து மலாவி நாட்டின் சட்டப் பணிகள் மற்றும் மக்களுரிமை அமைப்பைச் சேர்ந்த ஒருவர் கூறுகையில்,

ஜனாதிபதிக்கு எதிராக புரட்சி வெடிக்க ஆரம்பித்துள்ளது என்றார். (ஸ்ரீ-4)

அழகிய பழங்களில் எதைக் கொள்வோம் எதைத் தள்ளுவோம் என்று தேர்வது எப்படி?
-ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்

விடிந்தால் உள்ளூராட்சி சபைத் தேர்தல். தேர்தலுக்கான பிரசாரங்கள் ஓய்ந்து விட்டன. பொது நிலையில் நிற்போர், எல்லோரும் வாக்களியுங்கள் என்ற கோரிக்கையையும் தேர்தல் சுமுகமாக நடந்தேற வேண்டும் என்ற ஆசீர்வாதத்தையும் சமயோசிதமாகக் கூறி தேர்தல்பற்றிய தங்கள் கருத்தை நிறைவு செய்து கொண்டுள்ளனர்.

தேவையற்ற விமர்சனங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கான வழியாக அவர்கள் இதைக் கருதியிருக்கலாம். அதில் நியாயமும் இருக்கவே செய்கிறது.

அதேநேரம் ஊடகங்கள் தத்தம் கருத்துக்களை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் எடுத்துக் கூறியுள்ளன. அத்தகைய கருத்துகளுக்குள் சார்பு நிலையும் உண்டு என்பதை மறுக்க முடியாது.

ஊடகங்கள் எந்தெந்தப் பக்கம் சார்ந்தவையோ அவை தத்தம் சார்பு நிலைக்கேற்ப கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. அவைபற்றியெல்லாம் நாம் இங்கு எதுவும் பிரஸ்தாபிக்க விரும்பவில்லை.

ஆனால் ஊடகங்கள் எப்போதும் நடுநிலை சார்ந்து நிற்பதே பொருத்தமுடையதும் ஏற்புடையதும் ஆகும். ஏனெனில், இலங்கையில் இனவாதத் தீயை எண்ணெய் ஊற்றி வளர்ப்பதில் பெரும்பாலான ஊடகங்கள் கணிசமான பங்கை ஆற்றியுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை. இதன் காரணமாகவே சர்வதேச தொண்டு நிறுவனமொன்றின் அறிக்கையில், இலங்கையில் ஊடகப்பயங்கரவாதம் நிலவுகின்றது என்ற கருத்து இடம்பெற்றுள்ளது.

உலக மக்களின் பல்கலைக்கழகமாக விளங்குவது பத்திரிகைகளே என்ற ஒரு அறிஞனின் கருத்தியலோடு இதை ஒப்பிடும் இடத்து ஊடகங்கள் பயங்கரவாத சிந்தனையைத் தோற்றுவிக்குமாக இருந்தால், அதைவிடப் பயங்கரம் எதுவுமாக இருக்க முடியாது. எனினும் இலங்கையில் துரதிர்ஷ்டவசமாக ஊடகப்பயங்கரவாதம் நிலவி வருகின்றது. இஃது இனப்பிரச்சினையின் துன்பநிலை தொடர்வதில் கணிசமானபங்கை கொண்டுள்ளது எனலாம்.

எதுவாயினும் கடந்த சில, தினங்களாக வலம்புரி அலுவலகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் மரியாதைக்குரிய வாசகர்கள் உள்ளூராட்சித் தேர்தலில் வலம்புரியின் நிலைப்பாடு என்ன?

இதுவரை தேர்தல் குறித்து வலம்புரி மௌனம் சாதிப்பது போன்ற தோற்றப்பாடு தெரிகின்றது. எனவே வலம்புரி தனது கருத்தைக் கூற வேண்டும் என அன்புக் கட்டளை இட்டவண்ணம் உள்ளனர்.

தேர்தலைப் பொறுத்தவரை யாருக்கு வாக்களிப்பது என்ற முடிபை வாக்காளர்களே தீர்மானிக்க வேண்டும் என்ற கருத்தில் வலம்புரி மிகவும் உறுதியாக இருக்கிறது. இதனையே வலியுறுத்த வும் விரும்புகின்றது அவ்வளவுதான்.

# தாதியர் சங்கத்தின் நிர்வாக பதவிகளுக்கு இரகசியமான முறையில் நியமனங்கள்

## அரச தாதியர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இரகசியமான முறையில் தாதியர் சங்கத்தின் நிர்வாக பதவிகளுக்கு பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக அரச தாதியர் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

சுகாதார அதிகாரிகளும் அரச சேவைகள் ஒன்றிணைந்த தாதியர் சங்கமுமே இதற்கு பொறுப்பு கூறவேண்டும் என தாதியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை தாதியர் சங்கம் தாதியர் சேவையின் முக்கியத்துவம் மிக்க ஓர் அங்கம் என அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தாதியர் சங்கத்திற்கு கடந்த 18 ஆம் திகதி இரகசியமான முறையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது டன் சுகாதார சேவைகள் பணிப்பாளர்நாயகம் தாதியர் சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாக தாதியர் சங்க அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

தாதியர் சங்கத்தின் கொள்கைக்கு அமைய இது தவறானது எனவும் வைத்தியர் ஒருவர் தாதியர் சங்கத் தலைவராக பதவி வகிக்கின்ற ஒரே நாடு இலங்கை என தாதியர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

1988 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தாதியர்சங்க பாராளுமன்றசட்டம்மற்றும் 2005 ஆம் ஆண்டு திருத்தத்திற்கமைய தாதிய சங்கத்திற்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவேண்டுமென தாதியர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி நடைபெற்ற தேர்தல் முறைகேடானது என்று தெரிவித்து அதை இரத்து செய்யுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

சட்டத்தை கருத்தில் கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த அநீதியான நடவடிக்கையை திருத்தி சட்ட ரீதியான முறையிலும் நீதியாகவும் அதிகாரிகளை நியமிக்குமாறு அரச தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரியவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் ஊடாக சுகாதார அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## தரம் குறைந்த பெற்றோலினால் ரணிலின் வாகனத்திற்கும் பாதிப்பு

இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்த தரம் குறைந்த பெற்றோலினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான வாகனங்களில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வாகனமும் அடங்குவதாக ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது எதிர்க் கட்சித் தலைவரின் பாதிக்கப்பட்ட வாகனத்தை ரவி கருணாநாயக்க காண்பித்தார்.

ஐ.தே.க. பொருளாளர் செனரத் கப்புகொட்டுவவின் வாகனமும் இவ்வாறு பாதிக்கப்பட்ட சுமார் 10 ஆயிரம் வாகனங்களில் அடங்கும் என அவர் கூறினார்.

இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி பெற்றோல், அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின்படி இருக்கவில்லை என ரவி கருணாநாயக்க எம்.பி.கூறினார்.

அரசாங்க உயர் அதிகாரிகளின் அனுமதியின்றி எதையும் கொள்வனவு செய்ய முடியாது என்பதால் அமைச்சு செயலாளர் மீது குற்றம் சுமத்த முடியாது எனவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஆடி வெள்ளிக்கு தவிட்டு அப்பம்

ஆடிவெள்ளியன்று தவிட்டு அப்பம் செய்து சாப்பிடுவது அக்காலத்து மரபு.தரமான தவிடை வெல்லத்துடன் சேர்த்துக் குழைத்து சப்பாத்தி மாவு பதத்திற்கு தயார் செய்ய வேண்டும் .இதை சாப்பாத்தியை விட சற்று கனமான அளவில் தட்டி தீக்கனலில் சுட்டெடுக்க வேண்டும்.(இப்போது நான் எனப்படும் எண்ணெய் இல்லாத காய்ந்தரொட்டி சுடுவது போல) தற்காலத்தில் "நான்ஸ்டிக்"தோசைக்கல் உள்ளதால் அதில் சுட்டு எடுக்கலாம். இதை குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வட்டமாக உட்காந்து வெறும் வயிற்றில் ஆடி வெள்ளியன்று அதிகாலையில் சாப்பிட வேண்டும்.

கேரளாவில் சில இடங்களில் இப்போது இந்த வழக்கம் உள்ளது. அங்கு இந்த அப்பத்தை 'கனகப்பொடி' என்கின்றார்கள்.

தவிடு நார்ச்சத்துடையது. இதில் விற்றமின் உள்ளது. வெல்லத்தில் இரும்புச்சத்து உண்டு. ஆடிமாதத்தில் இந்த சத்துக்களை உடலில் சேர்த்துக் கொள்வது நல்லது என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் குடும்ப ஒற்றுமை கருதியும் இதை சாப்பிடுவார்கள்.

## வெள்ளி நற்சிந்தனை

### செவ்வியல் தமிழில் சீர்மியம்

29

ஒருவரை இன்னொருவர் நேரில் காணும் போது ஏற்படும் அநுபவம் இரு நிலைப்பட்டது.ஒன்று அவருடனான தொடர்பாடலால் உள்ளத்தில் ஏற்படும் உணர்வு நிலை மாற்றம். மற்றையது உடலில் ஏற்படும் மாற்றம்.இந்த இரு மாற்றமும் வியப்பைத் தருவதாகும். ஏன் இவ்வாறு மாற்றம் ஏற்பட்டது என்ற எண்ணமும் ஏற்படும்.மனித நிலையில் இம்மாற்றத்தை பலரும் எதிர்கொண்டிருப்பர். ஆனால் பக்திநிலையில் இத்தகையதொரு மாற்றத்தை எதிர்கொண்டவர் மணிவாசகர். அதனை அவர் மனித நிலையில் நின்று பாடலில் விளக்கியுள்ளார்.தனது மெய்ப்பாட்டைச் செந்தமிழ் சொற்களால் வரைந்து காட்டுகிறார்.

முன்னெப்போதும் உணராத ஒரு புதிய அநுபவத்தை எடுத்துரைக்கின்றார். உலக வாழ்க்கையில் அச்சமுற்றிருந்த வேளையில் இறைதரிசனம் அவருக்கு கிடைத்தது.அந்த தரிசனம் தந்த உணர்வு வேறுபாட்டை எல்லோரிடமும் சொல்ல ஆசைப்படுகிறார். இறைவன் பற்றி முன்னர் அறிந்திருந்த செய்திகளை விட நேரடியாகப் பெற்ற அநுபவம் அவரைத்தன்னை மறந்து பாட வைக்கிறது. மிக்க அன்பினையுடைய அடியாருக்கு தன்னை அடியவனாக செய்து வாழ்க்கை பற்றிய அச்சத்தை தீர்த்து ஆட்கொண்ட அந்த நிலையில் அவர் முற்றிலும் மாறிவிட்டார்.

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட போது தன்னில் ஏற்பட்ட மாற்றத்தை *அமுதூறி அகம் நெகவே அன்பு கூறப் புகுந்தாண்டான்* என்ற தொடர் மூலம் விளக்கியுள்ளார். அமுதம் போன்ற இன்பம் ஊற்றெடுத்து உள்ளம் அன்பினால் நெகிழவும் மெய்யன்பு தோன்றவும் எனது உள்ளத்தினுள்ளே புகுந்து ஆட்கொண்டான் என விளக்குகிறார்.அப்போதைய இறைவனது தோற்றத்தையும் அழியாத கோலமாக்கி காட்டுகிறார்.அழல் போன்ற சுடர் வடிவு . வெட்சியின் மலரை ஒத்த சிவந்த திருமேனி. திருக்கோலத்தை கண்டவுடன் இறைவனைப்பற்றி முன்னர் கேள்வியுற்றதை எல்லாம் எண்ணத்தில் ஓடி வருகின்றன .இறைவனே எமக்கு தந்தையானவன்.அவன்,அவள் ,அது என்னும் உலகபொருட்டொகுதியும் அவனே. ஞானப் பெருவெளியும் அவனே. அந்தமும் அவனே .பிரகிருதி மாயைக்கு அப்பாலாகி நிலைபெற்று நிற்பவனும் அவனே.மணிவாசகர் இறைவனின் பெருமையே பெருமைஎன வியந்து நிற்கிறார்.

சிவபெருமானே எம்பெருமான். தேவர்களுக்கும் அவனே தலைவன் என்பதை எமக்கு உணர்த்துகிறார். மணிவாசகர் *அச்சந்தீர்த்து* என்று குறிப்பிடுவதற்கு உரையாசிரியர் இருவினையொப்பு மலபரிபாக மெய்திய அடிகளை இறைவன் ஆட்கொண்டு ஆணவமல ஆற்றலை கெடுத்தவிடத்தும் எத்தனையோ காலமாகப் பயின்று வந்த பயிற்சி வயத்தான் பெருங் காயம் வைத்த பாத்திரத்தில் அதனை எடுத்த விடத்தும் அதன் மணம் நீங்காமை போல வாசனாமலம் உயிரைத்தாக் குதலின் அதனை நீக்கும் பொருட்டு மிக்க அன்பினையுடைய அடியவர்களுக்கு அடியவனாகச் செய்து ஆட் கொண்டதைக் குறிக்கும் என உரை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

விச்சை தா னிது வொப்ப துண்டோ
கேட்கின்
மிகுகாதல் அடியார் தம் அடியா
னாக்கி
அச்சந் தீர்த் தாட்கொண்டான்
அமுதமூறி
யகநெகவே புகுந்தாண்டான்
அன்புகூர
அச்சன் ஆண் பெண்ணவியா
காச மாகி
யாரழலாய் அந்தமாய் அப்பா
னின்று
செச்சைமா மலர்புரையு மேனி
யெங்கள்
சிவபெருமா னெம் பெருமான்
றேவர்கோவே

# தமிழ்மக்கள் மீது அரசுக்கு அக்கறையிருந்தால் வடக்கில் மீன்பிடித் தடைகளை மீண்டும் அமுல்படுத்தக்கூடாது

## அநுரகுமார திஸாநாயக்க எம்.பி.தெரிவிப்பு



அக்கறை இருக்குமானால் நீக்கப்பட்டுள்ள தடைகளை மீண்டும் கொண்டுவரக்கூடாது.

(கொழும்பு)

வடக்கில் தேர்தலை இலக்கு வைத்து மீன்பிடித்தடை உட்பட பல தடைகளை அரசு நீக்குகின்றது. ஆனால், தேர்தல் முடிந்த கையோடு இத்தடைகள் மீண்டும் கொண்டு வரப்படும்.

இதுதான் வழமையெனத் தெரிவித்த ஜனநாயகத் தேசியக் கூட்டணி எம்.பி.அநுரகுமார திஸாநாயக்க,தென்பகுதி மீனவர்கள் அனுபவிக்கும் உரிமைகள்,சலுகைகள் எதுவும் வடபகுதி மீனவர்களுக்கு வழங்கப்படவில்லையெனவும் குற்றம் சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடற்றொழில் நீரியல்வள ஒழுங்கு விதிகள் திருத்தச் சட்டமூல விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் அண்மையில் தமிழ் மீனவர்களின் வலைகளை கடற்படையினர் அறுத்துள்ளனர். இதனால் பாரிய நஷ்டத்தைச் சந்தித்துள்ள மன்னார் மீனவர்கள் வலைகளுக்குரிய நஷ்ட ஈட்டைப் பெறமுடியாதுள்ளனர்.

தலைமன்னாரில் மீனவர்கள் மீன்பிடிக்க பல தடைகள், நிபந்தனைகள் கடற்படையினரால் அமுல்படுத்தப்படுகின்றன. மீன்பிடிக்கச் செல்வதானால் இருவர் மட்டுமே போக முடியும்.இருவரும் பாஸ் பெறவேண்டும்.

தலைமன்னார் மீனவர்களுக்குப் பல தடைகள், நிபந்தனைகளை கடற்படையினர் விதித்துள்ளனர். இந்திய மீனவர்கள் எந்த விதத் தடையுமின்றி தலைமன்னாருக்குள் வந்து மீன்பிடித்துச் செல்கின்றனர்.

புதன், சனிக்கிழமைகளில் தலைமன்னார் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லமுடியாது. ஆனால், அந்தத் தினங்களில் இந்திய மீனவர்கள் இலங்கை எல்லைக்குள் எவ்விதத் தடையுமின்றி வந்து மீன்பிடித்துச் செல்ல கடற்படையினர் அனுமதித்துள்ளனர்.

• சில தடைகள், நிபந்தனைகளை அரசு நீக்கச் சொன்னாலும் சில படையதிகாரிகள் தான்தோன்றித்தனமாக செயற்படுகின்றனர்.

கடற்படையினர் யுத்தத்துக்குப் பாரிய பங்களிப்பைச் செய்துள்ள போதும் அவர்களின் இவ்வாறான நடவடிக்கைகள் ஒரு போதும் ஏற்கமுடியாது.தென்பகுதி மீனவர்களுக்குள்ள உரிமைகள், சலுகைகள் எதுவும் வடக்கு மீனவர்களுக்குக் கிடைப்பதில்லை.

இன்று வடக்கில் தேர்தலை இலக்கு வைத்து பல தடைகள் நீக்கப்படுகின்றன. ஆனால், இவை தேர்தல் முடிந்த கையோடு மீண்டும் கொண்டு வரப்படும். இதுதான் வழமை. உண்மையில் தமிழ்மக்கள் மீது அரசுக்கு அக்கறை இருக்குமானால் நீக்கப்பட்டுள்ள தடைகளை மீண்டும் கொண்டுவரக்கூடாது.

இலங்கையின் மீன்பிடித் தொழில் நடுத்தர வியாபாரிகளிடம் சிக்கித் தவிக்கின்றது. பெருமளவான மீனவர்களிடம் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான படகுகளோ, மீன்பிடி உபகரணங்களோ இல்லாததால் இவர்கள் கூலிக்காரர்களாகவே கடலுக்கு மீன்பிடிக்கச் செல்கின்றனர் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## தேர்தல் தினத்தன்று வட-கிழக்கு மக்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட வேண்டும்

### தேர்தல் கண்காணிப்பாளர்கள் வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணங்களின் பல பகுதியிலுள்ள மக்களுக்கு போக்குவரத்து காரணமாக தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக சுதந்திரமானதும் நீதியுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் அன்று கிளிநொச்சி ,யாழ்ப்பாணம், முல்லைதீவு ஆகிய பகுதிகளின் மக்களின் வாக்களிப்பு உரிமையைப் பாதுகாப்பது சவாலாக அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 25 வருடங்களுக்கு பின்னர் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வாக்களிக்கவுள்ள மக்களுக்கு வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் முறையான அடிப்படை வசதிகள் காணப்படுகின்ற போதிலும் போக்குவரத்து வசதிகள் மிகக்குறைவாக இருப்பதால் தேர்தல் தினத்தன்று அதிக தூரம் நடந்து செல்ல வேண்டும் என்று கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடபகுதியில் போக்குவரத்து வசதிகள் குறித்து அதிகளவிலான அமைப்புக்களினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் தேசிய இணைப்பாளர் சட்டத்தரணி ரசாங்க ஹரிச்சந்திர குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தேர்தல் ஆணையாளருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது கவனம் செலுத்தியதாகவும் ரசாங்க ஹரிச்சந்திர தெரிவித்தார்.

இதற்கமைய தேர்தல் தினத்தன்று குறித்த பகுதிகளின் வாக்காளர்களின் நலன் கருதி அரச போக்குவரத்து சேவை மற்றும் தனியார் போக்குவரத்து சேவை என்பன போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படும் என ரசாங்க ஹரிச்சந்திர நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு விவசாய ஊக்குவிப்புப் பொருட்கள் கையளிப்பு

(அச்சுவேலி)

புத்தூர் பிரதேசத்தில் இராணுவத்தினராலும் கமநல சேவை திணைக்களத்தினாலும் மக்களுக்கு விவசாய ஊக்குவிப்பு பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வீட்டுத் தோட்ட செய்கையை ஊக்குவிப்பதற்காக விதைப்பொருட்கள், உபகரணங்கள் இராணுவத்தினரால் வழங்கப்பட்டன.

இதேபோன்று புத்தூர் கமநல சேவை திணைக்களத்தினால் வீட்டுத் தோட்ட செய்கைக்கு தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விதைகளும் உபகரணங்களும் புத்தூர் சிவன்கோயில் மண்டபத்திலும் ஆவரங்கால் சிவன்கோயில் மண்டபத்திலும் வைத்து வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் விவசாய திணைக்கள அதிகாரிகளும் பொருளாதார அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-4-70)

## ஆரம்ப சுகாதார நிலையம் புனரமைக்கப்படாமையால் சிறுவர்கள்,கர்ப்பிணிகள் பெரும் சிரமம்

யுத்தத்தினால் சேதமடைந்த பாண்டியன்குள ஆரம்ப சுகாதார நிலையம் புனரமைக்கப்படாமையால் அப்பகுதிச் சிறுவர்களும் கர்ப்பிணித் தாய்மாரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேற்படி நிலையத்தை புனரமைப்பதற்கான மதிப்பீட்டு நடவடிக்கைகள் பல மாதங்களுக்கு முன்னர் கட்டட திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்பட்டும் இன்னமும் புனரமைப்புச் செய்யப்படாதுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாவதாக மக்கள் மீளக்குடியமர்ந்த இப்பாண்டியன்குள பிரதேசத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாமையால் இச்சுகாதார சேவையானது தகரக் கொட்டகைகளிலும் நடமாடும் வாகனத்தின் மூலமுமே இடம்பெற்று வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு ஆரம்ப சுகாதார நிலையத்தைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3)

## இடைநிறுத்தப்பட்டுள்ள வீதி புனரமைப்பு பணிகள்

### மக்கள் பெரும் அவலம்

என்றிப் திட்டத்தின் நிதியுதவியுடன் புனரமைப்பு செய்யப்பட்டு வரும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாண்டியன் குள பிரதான வீதியின் புனரமைப்பு வேலைகள் தொடர்ந்து இடம்பெறாமையால் அவ்வீதியால் பயணிக்க முடியாத அவல நிலை உள்ளது.


மேற்குறித்த பிரதான வீதியை புனரமைப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டு வீதி ஒப்பந்தகாரரால் புனரமைப்பதற்கு வீதித்தடை போடப்பட்டு கல் பரவப்பட்ட நிலையில் இரண்டு மாதகாலமாக எந்தப் புனரமைப்பு வேலைகளும் இடம்பெறாதுள்ளது.

பாண்டியன்குள மகாவித்தியாலம்,, கமநல சேவை திணைக்களம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பிரதேசசபை, பிரதேச செயலகம் ஆகியவற்றிற்கு இப்பிரதான வீதியூடாகவே பயணிக்க வேண்டியுள்ளது. மேற்குறித்த இடங்களுக்கு வேறு ஒடுக்கமான பாதைகளால் பயணிக்கும் பொழுது குறிப்பிட்ட தூரத்தில் வாகனங்களை நிறுத்தி விட்டு நடந்து செல்ல வேண்டியுள்ளது.

பாண்டியன்குள கமநல சேவைத் திணைக்களத்திற்கு கொழும்பிலிருந்து வாகனத்தில் இறக்குமதி செய்யப்படுகின்ற உரங்களை எடுத்துச் செல்ல முடியாது உழவியந்திரத்திற்கு மாற்றி கொண்டு செல்கின்ற போது பண விரயம் மற்றும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.


அத்தோடு மக்களும் இத்திணைக்களத்திற்குச் சென்று உரங்களை கொள்வனவு செய்ய முடியாது சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இப்பிரதான வீதியின் புனரமைப்பு வேலைகளை தாமதமின்றி மேற்கொண்டு போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3)



சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்துக்கு சுவர்ணா வெதுப்பக உரிமையாளரான ராசா குமாரசாமி ஐந்து உருக்கு அலுமாரிகளை அண்மையில் நன்கொடையாக வழங்கியுள்ளார். இந்நிகழ்வில் உருக்கு அலுமாரியை ராசா குமாரசாமி வாழ்வக நிறுவனத்துக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# திலகரட்ண டில்சான் தலைமையில் ஆஸியுடன் இலங்கை மோதும்!



அடுத்த மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ள அவுஸ்திரேலிய அணியுடனான போட்டிக்கு இலங்கை கிரிக்கெட் அணிக்கு திலகரட்ண டில்சான் தலைமை தாங்கவுள்ளார்.

ஆனால் இலங்கை கிரிக்கெட் அணியின் உபதலைவர் யார் என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை.

அவுஸ்திரேலிய அணி இலங்கையில் 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள், இரண்டு இருபது-20 போட்டி கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இத் தொடருக்கே டில்சான் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையின் அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

முதலாவது இருபது -20 போட்டி அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

டெஸ்ட் போட்டிக்கான அணி விபரம் அறிவிக்கப்படவில்லை.

ஆனால் ஒரு நாள் மற்றும் இருபது-20 போட்டிக்கான இருபது பேர் கொண்ட பெயர்ப் பட்டியலை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

அவர்களின் விபரம் வருமாறு, திலகரட்ண டில்சான், மகேல ஜெயவர்தன, குமார் சங்கக்கார, அஞ்சலோ மத்யூஸ், சாமர கப்புக்கெதர, ஜீவன் மெண்டிஸ், சாமர சில்வா, தினேஸ் சண்டிமால், திமுத் கருணாரட்ண, திசார பெரேரா, லசித் மலிங்க, சுரங்க லக்மால், தம்மிக்க பிரசாத், நுவான் குலசேகர, இசுறு உதான, சுறாஜ் ராண்டிவ், அஜந்த மெண்டிஸ், ரங்கண கேரத், மலிங்க பண்டார, சசித்ர சேனநாயக்க.

இதேவேளை இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாட திட்டமிட்டுள்ள போட்டித் தொடரை அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி புறக்கணிக்கலாம்? என்று சந்தேகம் எழுப்பப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 30 வருடங்களின் பின் காங்கேசன்துறையில் கூடைப்பந்தாட்டப் போட்டி




காங்கேசன்துறையில் 30 வருடகால இடைவெளியின் பின்னர் மீண்டும் கூடைப் பந்தாட்டப் போட்டியொன்று இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த போட்டியில் செ.ரமணன் தலைமையில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியும் காங்கேசன்துறை கடற்படை அணியும் இனறு பி.ப 4.00 மணிக்கு மோதவுள்ளன.

கடந்தகாலத்தில் காங்கேசன்துறைப் பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த நிலையில் அங்கு போட்டிகள் எதுவும் நடைபெறவில்லை. தற்போது அந்தப் பகுதியிலுள்ள ஒரு சில இடங்களில் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், கூடைப் பந்தாட்டப் போட்டி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முதலாவது டெஸ்ட் போட்டி; இந்திய அணி களத்தடுப்பில்

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையே முதலாவது டெஸ்ட் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்றுத் தொடங்கியது.

இது இரு அணிகளும் மோதும் 100-வது டெஸ்ட் போட்டியாகும். நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு தொடங்குவதாக இருந்த இந்த ஆட்டம் மழை காரணமாக தொடங்குவதில் சற்று தாமதம் ஏற்பட்டது. மழைக்கு பின் களமிறங்கிய இங்கிலாந்து அணி 49.2 ஓவர்களின் 127 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்திருந்த நிலையில் முதல் நாள் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டது.



## டெண்டுல்கர் 100ஆவது சதம் அடிக்க வேண்டும் -வசிம் அக்ரம்



டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் சேர்த்து டெண்டுல்கர் 99 சதம் அடித்துள்ளார். லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்று தொடங்கியுள்ள டெஸ்டில் டெண்டுல்கர் தனது 100வது சதத்தை அடிப்பாரா என்ற எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளது.

இந்த நிலையில் லோர்ட்ஸ் டெஸ்டில் டெண்டுல்கர் 100-வது சதத்தை அடிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவரும், தொலைக்காட்சி வர்ணணையாளருமான வசிம் அக்ரம் விருப்பம் தெரிவித்துள்ளார். சிறப்பு வாய்ந்த இந்த டெஸ்டில் டெண்டுல்கர் சதம் அடித்தால் நன்றாக இருக்கும். இதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன் என்றார்.

## ராசி இல்லாத மைதானமாம்!

இந்திய அணிக்கு லண்டன் லோர்ட்ஸ் மைதானம் என்றாலே அலர்ஜி. இங்கு விளையாடி உள்ள 15 டெஸ்ட் போட்டிகளில் இந்தியா ஒரே ஒருமுறை மட்டுமே வென்றுள்ளது. பத்து போட்டிகளில் பரிதாபமாகத் தோற்ற இந்தியா 4 போட்டிகளை சமன் செய்துள்ளது.

தற்போதைய இந்திய அணியில் மும்மூர்த்திகளாக விளங்கும் அனுபவ வீரர்கள் சச்சின், .டிராவிட், லஷ்மண் மூவருமே இந்த மைதானத்தில் இதுவரை சதம் அடித்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

டிராவிட் அதிகபட்சமாக 95 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இங்கு சாதனை மன்னன் சச்சினின் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை 37 மட்டுமே (சராசரி: 21.28), 1986இல் நடந்த டெஸ்டில் மட்டும் இந்தியா வெற்றி பெற்றுள்ளது. முன்னாள் அணித்தலைவர் சவுரவ் கங்குலி இங்கு அறிமுக வீரராகக் களமிறங்கி 7 மணி நேரம் களத்தில் நின்று 131 ஓட்டங்கள் விளாசி உள்ளார்.

## 2000-வது டெஸ்ட் போட்டி ஓர் பார்வை

டெஸ்ட் கிரிக்கெட் போட்டி தொடங்கி 134 ஆண்டுகள் ஆகிவிட்டது. இதுவரை 1999 டெஸ்ட் போட்டிகள் முடிபடைந்துள்ளன.

லோட்ஸ் மைதானத்தில் நேற்று 2000 ஆவது டெஸ்ட் போட்டி தொடங்கியது.1877 -ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாவது டெஸ்ட் போட்டி நடந்தது. மெல்பேர்னில் நடந்த இந்த டெஸட்டில் அவுஸ்திரேலியா 45 ஓட்டங்களில் இங்கிலாந்தை தோற்கடித்தது. 4 நாட்கள் கொண்டதாக இந்த டெஸ்ட் இருந்தது. இடையில் ஒருநாள் ஓய்வு கொடுக்கப்பட்டது.

ஒரு ஓவருக்கு 4 பந்து என்று கணக்கிடப்பட்டது. மூன்றாவது நாள் ஆட்டத்தை அதிகபட்சமாக 10000 பேர் பார்த்தனர். 2ஆவது டெஸ்டில் இங்கிலாந்து வென்று தொடரை சமன் செய்தது.நாளுக்கு நாள் டெஸட் போட்டியில் மாற்றம் கொண்டுவரப்பட்டு ஓய்வு நாள் நிறுத்தப்பட்டு 5 நாட்களாக மாற்றப்பட்டது.

1908- ம் ஆண்டு 100 வது டெஸ்ட் போட்டியும் (அவுஸ்திரேலியா-இங்கி லாந்து),1960 ம் ஆண்டு 500- வது டெஸ்ட் போட்டியும் (மேற்கிந்திய தீவுகள்- அவுஸ்திரேலியா),1984- ம் ஆண்டு 1000 வது டெஸ்ட் போட்டியும் (பாகிஸ்தான்-நியூசிலாந்து) நடைபெற்றது.

தற்போது இந்தியா-இங்கிலாந்து அணிகள் லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் மோதும் டெஸ்ட் போட்டி 2000 -வது டெஸ்ட் ஆகும். ஒரு நாள் போட்டி (50 ஓவர்), இருபது-20 போட்டி என்ற பரபரப்பான ஆட்டத்திற்கு இடையே 5 நாள் நடைபெறும் டெஸ்ட் போட்டிக்கு இன்னும் சுவாரசியம் இருக்கத்தான் செய்கின்றது.

இரண்டாயிரமாவது டெஸ்ட் போட்டி நடைபெறுவது அதற்கான அங்கீகாரம் இன்னும் குறையாமல் இருப்பதைக் காட்டுகின்றது.

1952 -ம் ஆண்டு இந்திய அணி டெஸ் இல் முதல் வெற்றியைப் பெற்றது. இங்கிலாந்துக்கு எதிராக சென்னையில் நடந்த இந்த டெஸ்டில் விஜய் ஹசாரே தலைமையில் இந்திய அணி 8 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்தியா இதுவரை 451 டெஸ்டில் விளையாடியுள்ளது. இதில் 110 -இல் வெற்றி பெற்றது. இங்கிலாந்து அணி அதிக பட்சமாக 911 டெஸ்டிலும் , அதற்கு அடுத்தபடியாக அவுஸ்திரேலியா 730 டெஸ்டிலும் விளையாடியுள்ளன. அதிக வெற்றி பெற்ற அணி அவுஸ்திரேலியா ஆகும் .

## கோபா அமெரிக்க கால்பந்து இறுதிப் போட்டியில் உருகுவே-பராகுவே மோதல்



ஆர்ஜென்டினாவில் நடந்துவரும் கோபா அமெரிக்க கால்பந்துப் போட்டி அரையிறுதியில் நேற்று முன்தினம் அதிகாலை உருகுவே-பெரு அணிகள் மோதின. பரபரப்பான இந்த ஆட்டத்தில் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இதனால் பிற்பாதி ஆட்டம் கூடுதல் பரபரப்பாக இருந்தது. 52,57 வது நிமிடத்தில்அடுத்தடுத்து உருகுவேயின் லூயிஸ் சுவாரஸ் கலக்கலாக கோலடித்தார். இதற்கு பெரு அணியால் பதில் கோல் அடிக்கமுடியவில்லை.முடிபில் உருகுவே அணி 2-0 என்ற கணக்கில் அபார வெற்றிபெற்றுஇறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

அதேபோல் நேற்று நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் பராகுவே-வெனிசுலா அணிகள் மோதின. இவ் ஆட்டத்தில் பராகுவே 5-3 என்ற கோல்கணக்கில் வெனிசுலாவை தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இந்நிலையில் இறுதிப்போட்டியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை உருகுவே மற்றும் பராகுவே அணிகள் மோதவுள்ளன. இதேவேளை மூன்றாமிடத்துக்காக நாளை பெரு மற்றும் வெனிசுலா அணிகள் களம் காண்கின்றன.



'பிபா' பெண்கள் உலககோப்பை தொடரில், ஜப்பான் அணி கோப்பை வென்றது. இதனையடுத்து நேற்று நாடு திரும்பிய ஜப்பான் வீராங்கனைகள்.

# NIRUTUITION CENTRE
KONDAVIL

பௌதிகவியல்
A/L 2013
திங், புதன் - 6.30 pm
திரு. செல்வன்
(3898)


## போர்க்குற்ற...

இதேவேளை போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு எதிரான பரப்புரைகளை அமெரிக்கா மேற்கொண்டு வருவதாக குற்றம் சுமத்துகின்ற அரசாங்கம் இக் கருத்தரங்கை நடத்துவதற்கு எப்படி அனுமதி வழங்கியது என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. அத்துடன் இக் கருத்தரங்கிற்கு தலைமை தாங்கவுள்ள அமெரிக்கப் பேராசிரியருக்கு அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகம் நுழைவு அனுமதி வழங் கியமை தொடர்பிலும் ஆங்கில ஊடகம் கேள்வி எழுப்பியுள்ளது. (எ)






## உயிர்த் தியாகம்...

இக் கருத்தைத் வெளியிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்காக உயிரைத் துச்சமாகக் கொண்டு போரில் ஈடுபட்டதாகக் குறிப்பிட்ட அவர் அந் நடவடிக்கைக்காக அரசாங்கம் நல்ல பரிசு தந்துள்ளதாகவும் கூறினார். (எ)

## கிலாரி மீது...

அவர் ஆசியாவுக்கு விஜயம் செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவைப் பயன்படுத்தி சீனாவை வலுவிழக்க செய்யும் முனைப்பாக இந்த விஜயம் கருதப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (எ)

# துணை இராணுவக் குழுக்களை அரசு கட்டுப்படுத்த வேண்டும்

## அமெரிக்கா கோரிக்கை

(கொழும்பு)

வடக்கில் துணை இராணுவக் குழுக்களின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படவேண்டும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது.

30 ஆண்டுகளாக புலிகளின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட பிரதேசத்தில் தேர்தல்கள் நடத்தப்படவேண்டியது அவசியமானது.

வடக்கில் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்துவதன் மூலம் ஜனநாயக ரீதியான அரசியல் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க முடியும்.

வடக்கு மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்ய வேண்டும். இலங்கை அரசாங்கத்தின் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் பாராட்டத்தக்கது என அமெரிக்கா அறிவித்துள்ளது. இன்னமும் 10 ஆயிரம் இடம்பெயர் மக்களே முகாம்களில் தங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இது ஆரோக்கியமான ஓர் நிலைமை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிளவடைந்த இரண்டு குழுக்களே கிழக்கில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக பாதுகாப்புத் தரப்பினர் அறிவித்துள்ளனர்.

குறித்த இரண்டு அமைப்புக்களிலும் 15 ஆயிரம் முன்னாள் போராளிகள் அங்கம் வகிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆயுதங்களைக் களையுமாறு இரண்டுதடவைகள் அரசாங்கம்பொது மன்னிப்புக் காலம் வழங்கிய போதிலும் குறித்த தரப்பினர் 80 வீதமான ஆயுதங்களையே ஒப்படைத்துள்ளனர். குறித்த இரண்டு குழுக்கள் மற்றும் கடும் போக்குடைய அமைப்பு ஒன்று ஆகியவற்றினால் பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்படுவதாக அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. ஆயுதங்களைக்களைவதற்குமேலும் ஒரு பொது மன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## நீதியான தேர்தலை...

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு. கருணாநிதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன், அ.பாத்துரை விநாயகமூர்த்தி, மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஜே.வி.பியின் ஆதரவாளர்கள், ஈ.பி.டி.பியின் ஆதரவாளர்கள், தேர்தல் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தேர்தல் சட்டதிட்டங்களை மீறுவோருக்கு எதிராக தேர்தல் திணைக்களம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த அவர், தேர்தல் திணைக்களத்தால் சட்டதிட்டங்கள் தொடர்பாக அறிவுறுத்தப்பட்டும் அதைச் சிலர் மீறுகின்றனர். இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு தேர்தல் திணைக்களத்திற்கு அதிகாரம் இல்லை. இருப்பினும் தேர்தல் சட்டதிட்டங்கள் அதிகளவில் மீறப்பட்டால் அதை இரத்துச் செய்யும் அதிகாரம் தேர்தல் திணைக்களத்திற்கு உள்ளது.

வெளி மாவட்டத்திலிருந்து யாழ். மாவட்டத் தேர்தல் பணிக்காக வரவழைக்கப்பட்ட 141 முகாமைத்துவ உதவியாளர்கள் தேர்தல் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டவர்கள் அல்ல எனவும் அவர்கள் அரசுக்குச் சார்பாக பணிபுரிவதற்காக இங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அவர்கள் தேர்தல் பணிக்காக, குறிப்பாக வாக்கெண்ணும் நிலையத்தில் பணி புரிவதற்காக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவினால் நியமிக்கப்பட்டவர்கள். இவர்களில் வவுனியா மாவட்டத்திலிருந்து 40 பேரும், மன்னார் 15, அநுராதபுரம் 30, கொழும்பு 40, பதுளை 16 பேருமாக மொத்தம் 141 பேர் உள்ளனர்.

தேர்தல் முறைகேடுகள் தொடர்பில் உண்மைச் சம்பவங்களை அறிந்துகொள்வதற்கு இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அதிகாரிகள் உண்மையைக் கூற மறுக்கலாம். அச் சந்தர்ப்பத்தில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் துணிந்து உண்மையைக் கூறுவார்கள் என்ற காரணத்தினாலேயே இவர்கள் இப் பணியில் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் இந்தப் பணியில் உட்படுத்தியதில் எவரும் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. நீதியான, நியாயமான தேர்தலை நடத்துவதில் தேர்தல் திணைக்களம் அக்கறையுடன் செயற்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## நாளைய உள்ளூராட்சித் தேர்தல்...

இது தொடர்பில் அரச அதிபர் கூறியுள்ளதாவது, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான உள்ளூராட்சித் தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இன்று சகல காவல் உத்தியோகஸ்தர்களும் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வர். இவர்களுக்கான பயண ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையங்கள் 459-ம் கிளிநொச்சியில் 95 வாக்களிப்பு நிலையங்களும் மொத்தமாக 554 வாக்களிப்பு நிலையங்களும் உள்ளன.

நடைபெறவுள்ள தேர்தலுக்கு 5ஆயிரத்து 201உத்தியோகத்தர்கள் கடமையாற்றவுள்ளனர். இவர்கள் சுமார் 150 வாகனத்தில் இன்று ஏற்றிச் செல்லப்படவுள்ளனர்.

இன்று காலை 8.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்கும்படியும்பின் இவர்கள் பொலிஸ் பாதுகாப்புடன் வாக்களிப்பு பெட்டிகளுடன் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவர் எனவும்,

நேற்று மாலை 6.00 மணிக்கு முன் அலுவலர்கள் யாழ். மாவட்ட செயலகத்திற்குச் சென்றுள்ளனர். யாழ்.மாவட்டத்திலிருந்துநெடுந்தீவுக்கு 30 அலுவலர்களும் 03 வாக்களிப்புப் பெட்டிகளும், எழுவை தீவுக்கு 10 அலுவலர்களும் 01 வாக்களிப்புப் பெட்டியும் அனலைதீவுக்கு 18 அலுவலர்களும், 02 வாக்களிப்புப் பெட்டிகளும், நயினாதீவுக்கு 30 அலுவலர்களும் 03 வாக்களிப்புப் பெட்டியும், கடல் மூலமாக அனுப்பப்படவுள்ளது.

வாக்களிப்பு முடிந்ததும் வாக்களிப்புப் பெட்டிகள் எழுவைதீவு, நயினாதீவு, அனலைதீவு ஆகிய இடங்களிலிருந்து கடல் வழிமூலமாகவும் நெடுந்தீவிலுள்ள வாக்களிப்புப் பெட்டிகள் ஹலிகொப்டர்மூலமாகவும் கொண்டுவரப்படும் என்றும்கூறியுள்ளார்.(எ)

## தமிழக முதல்வர்...

கைகள் குறித்து தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு பிரசாத் காரியவசம் விளக்கியதாக கூறப்படுகின்றது.

இந்தியாவுக்கான இலங்கையின் துணைத் தூதுவர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தியும் கலந்துகொண்ட இச் சந்திப்பில் இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் மீது தொடர்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களை உடனே நிறுத்த இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரசாத் காரியவசத்திடம் முதலமைச்சர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை விவகாரம் குறித்து அமெரிக்க இராஜாங்கஅமைச்சர் கிலாரி கிளின்டனுடன் முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று கலந்துரையாடியிருந்தார். அத்துடன் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக தமிழக சட்டசபையில் இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## சுவரொட்டிகள் அகற்றப்படாது...

உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் காட்ட சாட்டமான கோரிக்கைகளை முன்வைத்தன.

குடாநாட்டின் அனைத்துப் பாகங்களிலும் அரச தரப்பின் சுவரொட்டிகள், பனர்கள் மற்றும் கட்டவுட்டுக்கள் வைக்கப்பட்டுள்ளன. தேர்தல் விதிகளின் பிரகாரம் இவை அகற்றப்பட வேண்டும். ஆனால் பொலிஸார் இவற்றை அகற்றாமல் தவிர்த்து வருகின்றனர். எதிர்க்கட்சிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பியின் சுவரொட்டிகள் மட்டுமே அகற்றப்பட்டு வருகின்றன. இவ்வாறு அகற்றப்படால் தேர்தல் நடத்தப்படுவது தேர்தல் வீதிகளை அப்பட்டமாக மீறப்படும் நடவடிக்கையாகும். இது ஒரு மோசமான ஒரு தேர்தல் என அவர் குற்றம் சாட்டினார்.


இதையடுத்து தேர்தல் ஆணையாளரை தொடர்புகொண்ட வேளையிலேயே சுவரொட்டிகள் மற்றும் பனர்கள், பதாகைகள் என்பன 4.00 மணிக்குள் அகற்றப்படவேண்டும் என உத்தியோகபூர்வஎழுத்துமூலகடிதத்தைபொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு சமர்ப்பிக்க உத்தரவிட்ட அவர் 4.00 மணிக்குள் அகற்றப்படாது விட்டால் தேர்தல் மறு திகதி அறிவிக்கப்படாது ஒத்திவைக்கப்படவேண்டிய சூழ்நிலை ஏற்படு என அந்தக் கடிதத்தில் எச்சரிக்குமாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

எனினும் நேற்று இரவுவரை தேர்தல் சுவரொட்டிகள் அகற்றப்படாது காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# மரண அறிவித்தல்

## சின்னையா ஐசாக் சிற்சபேசன்

**(Former Gen.Manager, Aqua Culturist / Consultant.
HAILONG INTERNATIONAL CO.(PVT)LTD)**



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், அனுராதபுர வீதி புத்தளத்தில் வசித்து வந்தவரும், புவனேஸ்வரி அம்பாள் வீதி, அரியாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சின்னையா ஐசாக் சிற்சபேசன் 18-07-2011 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா டெய்சி ஜெபமலர் தம்பதியினரின் அன்பு மகனும், துரைசிங்கம், தவமணி தம்பதியினரின் அன்பு மருமகனும், சசிரேகா ஆனந்தி (ஆசிரியை, யா/செ்ன் ஜோன்ஸ் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், எஸ்தர் மலரினியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இம்மானுவேல் மலரவன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), எபநேசர் ஜோகானன்(சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கௌரி(கட்டார்), பாஸ்கரசபேசன் (பொறியியலாளர்-சவூதி அரேபியா), பிரியதர்சினி (ஆசிரியர், யா/திருக்குடும்ப கன்னியர்மடம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும்,

பத்மநாதன்(பொறியியலாளர்- கட்டார்), பத்மலோஜினி, தேவகிருபாகரன் (ஆசிரியர், யா/கனகரத்தினம் ம.ம.வி), ராஜ்மோகன்(U.K), வசந்தி(ஜேர்மனி), மஞ்சுளா(U.K) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஹமி(U.K), அனஸ்லி(ஜேர்மனி), பெனடிக்சந்திரன் (U.K) ஆகியோரின் பிரிய சகலனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22.07.2011) வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லூர் பரியாக்கோபு தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 64, புவனேஸ்வரி அம்பாள் வீதி,
அரியாலை மேற்கு, நல்லூர்.**

(5525)

**தகவல்:
குடும்பத்தினர்**

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.